
தமிழ்மன்ற வெளியீடு

# தமிழ்நாதம்

நாதம் 3 தை - மாசி 93 ஒலி 1



# SELFREI IMPEX

SRILANKANISCHE LEBENSMITTEL SPEZIALITÄEN
GROßHANDEL

"லீலா" நிறுவனத்தினர் ஜேர்மனிக்கென்று விசேடமாக சுகாதார முறைப்படி தயாரித்து வழங்கும் தரமான பொருட்களையும், திங்கள் தோறும் இறக்குமதியாகும் மகாவலி அபிவிருத்தித் திட்ட இயற்கை முறை விளைபொருட்களான மரக்கறி, பழவகைகளையும், இறால், நண்டு மற்றும் மீன் வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்ய வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளோடமைந்த எமது விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் விற்பனை நேரங்களில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## விற்பனை நேரங்கள்:

| | | |
|---|---|---|
| திங்கள் - வெள்ளி | 10.00 - 13.00 | 15.00 -18.30 |
| சனி | 10.00 - 14.00 | |

சனி, வியாழன் ஆகிய நாட்களில் நீண்ட விற்பனை நேரங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது.

சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் கொடுக்கப்படும் நியாயமான கட்டளைகள் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் கட்டணமின்றி நேரடி விநியோகத்துக்கு எற்றுக்கொள்ளப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு,**

## SELFREI IMPEX

FREIA BÄßMANN,
ADELONSTR. 30,
6230 FRANKFURT MAIN 80.

TELEFON: 069/309223
PRV: 069/318619
TELEFAX: 069/331604

தமிழ்மன்றவெளியீடு

# தமிழ்நாதம்

நாதம் 3 தை - மாசி 93 ஒலி 1

## உள்ளடக்கம்:

* தொடர்கதை
* கட்டுரைகள்
* கவிதைகள்
* சிறுகதைகள்
* இன்னும் பல்சுவை அம்சங்கள்

ஆசிரியர்குழு:


திரு. ஆ. பூபதிபாலவடிவேற்கரன்
திரு. ந. இராகவன்
திரு. இ. யசோதரன்

தொடர்புகளுக்கு....
Editor,
"TAMIL NATHAM"
Post Fach 102125,
6000 Frankfurt 1.

இவ்விதழில் வரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கதாரர்களே பொறுப்புடையவர்கள்.

ஆக்கங்களின் கருத்து மாறுபடாது அதனைச் சுருக்கவோ திருத்தவோ ஆசிரியர்களுக்கு முழு உரிமையுண்டு.

# ஆசிரியருடன் ஒரு நிமிடம்..



இதோ உங்கள் கையில் இந்த இரண்டு வயதுக் குழந்தை! ஆம்.
தமிழ்நாதத்துக்கு இரண்டு வயது மட்டுமல்ல;இது உங்கள் குழந்
தையும் கூட. பத்திரிகைக் குழுவினரான நாம் வெறும் செவிலித்
தாயினரே. இந்தக் குழந்தையின் பெற்றோரும் உற்றோரும் வாசகர்
களாகிய நீங்கள் தான். இந்தக் குழந்தை எப்படி இருக்கவேண்டும்,
எப்படி வளரவேண்டும் என்று தீர்மானித்து நாளொரு வண்ணமும்
பொழுதொரு மேனியுமாகத் தமிழ்நாதம் வளர்வதில் ஈடுபாடு காட்
டவேண்டிய உரிமையும் கடமையும் உங்களுடையவையே. செவிலித்
தாயினரான பத்திரிகைக் குழுவினர் உங்களுக்காக இக் குழந்தை
யைப் பராமரிக்கக் கடமைப் பட்டவர்கள். தமிழ்நாதம் பத்திரிகையை
சுவையும் அழகும் மிக, மற்றக் குழந்தைகளை விட உயர்வாகவும், த
ரமாகவும் இருக்கும் விதத்தில் அல்லது ஈடாகவாவது இருக்கும்
விதத்தில் தொகுத்து உரிய நேரத்தில் உங்கள் கைகளில் ஒப்படைப்
பது எங்கள் கடமை. உங்கள் குழந்தை எந்த விதமான ஆக்கங்க
ளைத் தாங்கி எப்படியான ஒரு சஞ்சிகையாக வெளிவரவேண்டும்
என்று தீர்மானிப்பது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. உங்கள்
படைப்புக்களுக்குத் தான் இச் சஞ்சிகையில் முதலிடம்ஆசிரியர்
கருத்து, அட்டைப்பட ஓவியத்துக்கான கருத்து, உங்கள் கேள்விக
ளுக்கான பதில்கள், அறிமுகம் என்பன தவிர்ந்த ஏனைய அனைத்
துமே உங்கள் ஆக்கங்களாகத் தான் இருக்க வேண்டும் என்பதே
நமது விருப்பம். இப்படி அமையும் போது தான் உண்மையான ஒரு
கருத்துப் பரவலையும், நியாயமான ஒரு பத்திரிகைச் சுதந்திரத்தை
யும் தமிழ்நாதம் மூலம் தவழவிடலாம் என்பது எமது ஆணித்தர
மான கருத்தாகும். உங்களுடைய கருத்துகள், ஆக்கங்களுக்கு
முதலிடம் கொடுத்து, அவை எம்மிடம் உரிய நேரத்தில் வந்து
கிடைக்காத பட்சத்தில் மட்டுமே பத்திரிகைக் குழுவினரின் ஆக்கங்
கள் தாள்களை அலங்கரிக்கும் என்பதனால் இச் சஞ்சிகையின்
போக்கைக் கட்டுப்படுத்துபவர்கள், நிர்ணயிப்பவர்கள் நீங்களே!உங்
கள் கருத்துக்களை முன்வையுங்கள்;உங்கள் படைப்புக்களை உரிய
நேரத்தில் அனுப்பி வைப்பதன் மூலம் தமிழ்நாதத்தின் போக்கிலும்
வளர்ச்சியிலும் பங்காளிகளாக மாறிவிடுங்கள் என்று அறைகூவுகி
றது நடப்பு ஆண்டின் புதிய பத்திரிகைக் குழு.

# அறிமுகம்:

## "ஏலையா"

களைத்தும் சோர்ந்தும் இருக்கும் பொழுதெல்லாம் படகுகளை நகர்த்தவோ அல்லது வலைகளை இழுக்கவோ மீனவர்கள், மாலுமிகள் போன்ற கடற்றொழிலாளர் அனைவருக்குமே புதுவேகம் தரும் சக்தியை அளிக்கும் ஏலையா என்ற தாரகமந்திரத்தைத் தன் பெயராகக் கொண்டு வெளிவருகிறது ஜேர்மனியிலுள்ள சஞ்சிகை ஒன்று. நான்கு வருடங்களாக ஓயகௌசன் தமிழர் ஒன்றியத்தின் வெளியீடாக ஒலித்து வரும் ஏலையாவின் ஆசிரியர் திரு. முருகதாஸ் இச் சஞ்சிகையை, சிறந்த ஒரு சஞ்சிகை என்று பலராலும் பாராட்டப்படும் விதத்தில் நடத்திவருகிறார்.

எமது வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தும், எமக்கு வாழ்வழித்தும் வந்துள்ள பனைமரத்தை எங்களால் மறக்கவோ அல்லது புறக்கணிக்கவோ முடியாது. பனைமரத்தின் பலன்களைப் பாட்டாளி மக்கள் பாமரமக்கள் என்று சகலருமே அனுபவித்து வாழ்ந்து வந்தார்கள்; வருகிறார்கள். சூரிய ஒளிக்கு விளம்பரம் தேவையா? அதே போலத்தான் நேற்றும் இன்றும் மட்டுமல்ல என்றென்றும் எமக்குக் கற்பகதருவாக இருக்கும் பனைக்கு விளம்பரம் தேவையில்லை. பரம்பரை பரம்பரையாகப் பனையின் பலன்களை அனுபவித்து வந்த எம்மினம் சில காலங்களுக்கு முன்னர்வரையிலும் -பொன் முட்டை இடும் வாத்தினை வெட்டிய முட்டாள்த்தனத்துக்கு ஈடாக -பனையின் பலன்களை முற்று முதலாக அனுபவிக்கும் நோக்கிற் பனைகளைத் தறித்ததனாற் பனையின் எண்ணிக்கை குறையத் தொடங்கியபோது .....................
இன்று எம் மக்களிடையே நிலவும் பஞ்சநிலையை அன்றே உணர்ந்துகொண்ட தீர்க்கதரிசியான மில்க்வைற் ஸ்தாபகர் திரு. கனகராஜா அவர்கள் "பனையை வளர்ப்போம்; பலன் பெறுவோம்" என்ற தாரகமந்திரத்துடன் எம் மக்களிடையே பனையின் வளம் பற்றியும் அதன் பலன் பற்றியும் எடுத்துக் கூறி நம் பாரம்பரிய பிரதேசங்களிற் பனை நாட்டு விழாக்களை நடத்தியதுடன் பனை வளர்ப்புக்கான செயற்திட்டமாகப் பனம் விதைகளையும் இலவசமாக வழங்கி வந்தார்.

ஈழமண்ணையும் அங்கே பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழினத்தையும் நினைத்துப் பார்க்காத கவிஞன் பாரதி தனது 'காணி நிலம் வேண்டும்' பாடலில் .......... பத்துப் பன்னிரண்டு தென்னை மரம் வேண்டும் என்று பாடினானே, இன்று நாம் கூறுகிறோம்: ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் பத்துப் பன்னிரண்டு பனை மரம் வேண்டும் என்று.

இப்படியான பனைமரத்தினையே தனது முகப்புப் படமாகத் தாங்கி வேறு எந்தப் படத்தினையும் அட்டைப்படமாக ஏற்காது வெளிவருகிறது ஏலையா. "ஏலையா" என்று கோஷமிட்டு மிகவும் கடினமான காரியங்களைக் கூட இலகுவாக முடித்துக் கொள்வது போல எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கும் கடினமான பணியில் இந்த ஏலையாவும் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. நமது அடிப்படைப் பொருளாதாரத்தின் சின்னமான பனையைத் தனது அட்டைப்படத்தில் எப்போதுமே தாங்கி வெளிவரும் ஏலையா ஈழத்தமிழரின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவென்று கங்கணம் கட்டி நிற்பதில் வியப்பேதுமில்லையே! முன் அட்டையை ஏலையா என்ற பெயரும் பனைமரமும் அழகுபடுத்த பின் அட்டையை ஈழத்தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களின் வரைபடம் அழகுபடுத்துகிறது. (தமிழரின் எல்லைகளை அவதானிக்கும் அதேவேளையில் ஸ்ரீலங்காவின் மலையகப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் எம் மக்களை நாங்கள் மறந்து விடக்கூடாது.)

நான்கு ஆண்டுகளைக் கடந்து ஐந்தாவது ஆண்டைத் தன் பயணத்தின் மைல் கல்லாகக் கொண்டு மிக நிதானமாகச் சேவையாற்றி வரும் ஏலையா மாதம் ஒரு இதழாக இதுவரையில் 60 இதழ்கள் வெளிவந்துவிட்டதாகவும் இனியும் இதுபோலத் தொடர்ந்தும் வெளிவரும் என்கிறார் சஞ்சிகை ஆசிரியர் திரு. முருகதாஸ். பனைச்சின்னம் பற்றிக் குறிப்பிடும் போது பனை எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது மனிதகுலத்துக்குத் தன்னை ஈய்வது போலவே தமிழர்களாகிய நாமும் "சமூகம் எங்களுக்கு என்ன செய்தது என்று எதிர்பார்க்காமல் சமூகத்துக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தவே பனையைச் சின்னமாகக் கொண்டு ஏலையா வெளிவருகிறது என்றும் ஆரம்ப காலங்களில் தமிழரின் வரலாற்றை ஏட்டுச்சுவடிகளே சுமந்து வந்தபடியால் ஏலையாவின் அட்டைப்படத்துக்குப் பனையே சாலவும் பொருத்தமானது என்றும் கூறுகிறார் அவர்.

இதோ தொடர்ந்தும் ஏலையா பற்றிய அவரது கருத்துக்கள்: "ஏலையா என்ற சொல் ஒற்றுமையைக் குறிக்கும்;அன்பு, ஐக்கியம் என்பனவற்றையும் மட்டுமல்லாமல் ஒரே மனதாக, ஒரே நேரத்தில் என்ற கருத்துக்களையும் குறிக்கும்." என்றவர் அதற்கு விளக்கமாக,

"படகோட்டிகள் படகில் செல்லும்போது அம்பாப் பாட்டுப் பாடுவார்கள். அதில் ஏலையா என்ற அடிவரும்போது தான் ஒரேநேரத்தில் எல்லோரும் இணைந்து துடுப்பால் நீரை வலிப்பார்கள். படகும் முன்னேறிச் செல்லும்" என்று கூறிவிட்டு "ஏலையாவை ஆரம்பிக்கும்போது எம்மினத்துக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்ற தூய்மையான எண்ணத்தையே ஏலையா மூலதனமாகக் கொண்டிருந்தது. அந்தத் தூய்மையான எண்ணத்தை இறுக்கமாக, இதயசுத்தியாகக் கொண்டு இன்னமும் தன் பயணத்தைத் தொடர்கின்றது" என்கிறார்.

ஏலையாவைப் பற்றி மேலும் கூறுகையில் "தாயக மீட்புப் பணியோடு கூடிய அனைத்து முற்போக்குச் சிந்தனைகளையும் கருத்துகளையும் மக்களுக்குத் தொடர்ந்து கூறி அனைவரையும் அரவணைத்து அழைத்துச் செல்கின்றது. பரிசுத்தமான இதயத்தைக் கொண்டு உண்மையை நேசிக்கும் ஏலையா அன்பும் ஒழுக்கமும் பண்பும் மிக்க நாகரிகமான உலகில் தமிழினம் பெருமிதம் கொள்ளக் கூடிய இனமாகத் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதே ஏலையாவின் குறிக்கோளும் இலட்சியமுமாகின்றது" என்றுரைக்கும் ஏலையா ஆசிரியர் திரு. முருகதாஸ் அவர்கள் மேலும் கூறுவதாவது: நல்வழி காட்டும் கைகாட்டி போல் ஏலையா என்றும் சரியான வழியையே காட்டும். ஊர் போகும் பாதையைக் காட்டும் கைகாட்டி மழைக்கும், சூறாவளிக்கும், புயலுக்கும் அசையாது நிற்பது போலவே ஏலையாவும் தான் வரித்துக் கொண்ட குறிக்கோளுக்கிணங்க மக்களுக்குச் சரியான வழியையே காட்டும். உண்மை சீக்கிரத்தில் உலகுக்குப் புலப்படாது. பொய்யும், புரட்டும், போலித்தனமும் நிறைந்த உலகில் உண்மை மிக ஆறுதலாகவே வெளிப்படுவது போல், ஏலையாவுக்கும் சோதனைகள், துன்பங்கள் உண்டு. ஆனால் உண்மை ஜெயிக்கும் என்ற அசையாத நம்பிக்கை எலையாவுக்கு உண்டு.

உண்மை வெல்லும்.
எம்மினம் வளம் பெற நல்லது செய்வோம்.

மேற்படி கருத்துக்களை முன்வைக்கும் ஏலையா சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ள:

K. K. Murugathasan,
Bromberger str 8
4200 Oberhausen
(Germany)

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# மன்றச்செய்திகள்

கேள்வி: வேகமான துடிப்புடன் அனுபவம் கலந்த ஆற்ற லைக் கலந்தால் என்ன வரும்?
பதில்: 1993ம் ஆண்டுக்கான தமிழ்மன்ற நிர்வாகக்குழு அமையும்.

ஆம்! தமிழ்மன்றத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகக்குழுவினர் தெரிவு 9.1.93ல் இடம் பெற்றது. வாக்குரிமை பெற்றவர்களாக 56 பேர் மட்டுமே வந்திருந்தார்கள். அங்கத்தவர்களிற் பலபேர் எங்கேதான் போய்விட்டார்களோ? 6.30 மணிவரையிலும் தேர்தல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்பின் ஈழத்தில் மரணமானவர்களை நினைந்த 2 நிமிட மௌன அஞ்சலியைத் தொடர்ந்து தலைவருரை, செயலாளரின் ஆண்டறிக்கை, தனாதிகாரி அறிக்கை என்ற வழமையான 'அறுவை'கள் இடம் பெற்றதைத் தொடர்ந்து புயல் வீசியது.......பிராங் பேட் நகரத்தில் அல்ல; தமிழ்மன்றத்தில்த்தான். குறைநிறைகளைக் கூறி, விமர்சனங்கள் அள்ளிவீசப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களின் விளக்கங் களும் இடம் பெற்றன.

விமர்சனங்கள் வரவேற்கப்பட வேண்டியவையே! விமர்சிக்கும் விதங்கள் வார்த்தைகள் என்பவற்றில் மட்டுமல்லாமல் என்ன நோக்கில் ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுகிறது, அதன் பின்விளைவு என்ன என்பவற் றிலும் நாங்கள் நிறைய, நிறைய, நிறையக் கவனம் எடுக்க வேண்டும். மனங்கள் நோகக் கூடாது; முகங்கள் எதிர்காலத்திலும் ஒன்றையொன்று எதிர்நோக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கு டன் பிழைகள் சுட்டிக்காட்டப்பட வேண்டும் -மீண்டும் அதே பிழைகள் வராமலிருப்பதற்காக; தவறுகளைத் தட்டிக் கேட்க வேண்டும் -அவை தொடர்ந்தும் நிலைத்து விடாமலிருப்பதற்காக!

புதிய ஆண்டுக்கான தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியது. மேடை யில் வந்து அமர்ந்த புதிய செயற்குழுவுக்கான வேட்பாளர்களைப் பார்த்ததுமே வாக்காளர்களிற் பலரின் முகங்கள் வாடத்தொடங்கியது போலிருந்தது. இவர்களா? இவர்களால் முடியுமா? அதிகமானோர்

துடிப்பு நிறைந்த இளைஞர்கள்-ஆத்திரப்படுகிற அவசரத்தில் அனைத்தையும் போட்டுடைத்துவிடுவார்களோ என்று கேள்விகள் அவர்கள் மனத்தில் எழுந்திருக்கலாம். எழுந்திருந்தாற் தவறும் அல்ல! தங்கள் தமிழ்மன்றம் என்ற பற்றுணர்வும் அது தொடர்ந்தும் எழுச்சியுடன் இயங்கவேண்டும் என்ற பொறுப்புணர்வும் கொண்டவர்கள் தானே அன்று அங்கே வருகை தந்திருந்தார்கள். அவர்களுடைய முன்னெச்சரிக்கையும் பற்றுணர்வும் மிகுந்த பாராட்டுக்குரியவை.

ஆனால், துடிப்பான இளமை தனக்குப் பொறுப்பும் இருக்கத்தான் செய்கிறது என்று அதே மேடையில் எடுத்துக்காட்டி அனைவரது அச்சத்தையும் பறக்கடித்தது மட்டுமல்லாமல் நம்பிக்கையையும், பாராட்டையும் பெற்றுவிட்டார்கள்! விமர்சனங்களைச் செய்வது கரிசனை உள்ளபடியால்த் தான் என்று காட்டுவது போலவும் தமிழ்மன்றத்திற் தமக்கு உள்ள தளராத பற்றை நிரூபிப்பது போலவும் அனுபவமில்லாத தங்கள் செயற்பாடுகளை வழிநடத்த அனுபவத்திற் பழுத்த -ஆனாலும் தேர்தல் விண்ணப்பம் செய்யாமல் இருந்த -முன்னைட தலைவர் ஸ்ரீபதியையே தொடர்ந்தும் தலைவராக இருக்கும்படி வேட்பாளர்கள் அனைவருமே ஏகமனதாகக் கேட்டுக்கொண்டனர். அப்படியே செய்தும் விட்டதனாற் பாராட்டுக்களை மட்டுமல்ல நம்பிக்கையையும் இவர்கள் வென்றெடுத்து விட்டது இயற்கையே! இத்துடன் நின்றுவிடாமல் இன்னும் ஒருபடி மேலேயே போய் அனுபவம் நிறைந்த ஆற்றல்களான திருவாளர்கள் கனகராயர், பாலேந்திரா, சொர்ணலிங்கம் ஆகியோரைத் தங்களுக்கு வழி காட்டும் போஷகர்களாகவும் அடைந்துகொண்டனர் இந்த வேகமான துடிப்புகள்.

பிறந்ததிலிருந்தே எதையும் செய்யாதவர்களும், இறந்துவிட்டவர்களும் தான் பிழையே விட முடியாதவர்கள் என்ற உண்மைப்படி இந்தப் புதிய செயற்குழுவினரும் பல பிழைகளை விடலாம்; தவறுகள் இடம் பெறலாம். அப்போதெல்லாம் தங்களைத் தட்டிக் கேட்டுத், தட்டிக் கொடுத்து எங்கள் தமிழ்மன்றம் எழுச்சியுடன் நடைபோட உதவி செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு தமது பொறுப்புகளைப் பாரமெடுக்கின்றனர் எங்கள் பிராங்பேட் தமிழ்மன்றத்தின் புதிய செயற்குழுவினர்.

<u>மதிப்புக்குரிய போஷகர்கள்</u>

திரு. க. கனகராயர்
திரு. க. பாலேந்திரன்
திரு. ஐ. சொர்ணலிங்கம்

தலைவர் : திரு. சி. ஸ்ரீபதி.
உபதலைவர் : திரு. இ. ரவிசங்கர்.
செயலாளர் : திரு. வே. மனோகரன்.
உபசெயலாளர் : திரு. க. இராஜேந்திரன்.
பொருளாளர் : திரு. சி. நித்தியானந்தன்.
கணக்குப்பரிசோதகர் : திரு. வே. சோதீஸ்வரன்.
பத்திராதிபர்: திரு. ஆ. பூபதிபாலவடிவேற்கரன்.

செயற்குழு அங்கத்தவர்கள்

திருமதி. வனஜா கிருபாகரன்
திரு. மு. திருநாவுக்கரசு
திரு. ந. இராகவன்
திரு. எஸ். பாலச்சந்திரன்
திரு. மா. விக்ரமன்
திரு. ச. சிவசுப்பிரமணியம்
திரு. கோ. யோகேஸ்வரன்
திரு. செ. ஆனந்தசெல்வம்

எங்கள் முன், எங்கள் பிரதிநிதிகளாக, எங்கள் தமிழ்மன்றத்தில், எங்களுக்காகக் காரியம் ஆற்றப் புறப்பட்டிருக்கும் இவர்களை எங்கள் ஆதரவு என்ற நிழல் கொடுத்து எங்கள் தமிழ்மன்றத்தின் தொடர்ச்சியான எழுச்சிக்குக் கைகொடுப்பது எங்கள் கடமை அல்லவா!

# பொங்குதே நெஞ்சம்



எங்கள் மக்கள் அங்கே துடிக்க
பொங்கல் என்ன பொங்கல் எமக்கு?
சிங்கள அரசின் பிடியில் இருந்து
எங்கள் நாடுவிடுதலை காணும்
நாளும் விரைவில் வந்தே தீரும்
பொங்கி மகிழ்வோம் அந்த நாளில்
பொறுத்திரு தமிழா, சற்றே பொறுத்திரு!
பொங்கும் நெஞ்சே சிறிதே பொறுத்திரு!

பித்தன்.

# இது உங்கள் பக்கம்!

* கறுப்புத்தாலி, இதயதாகங்கள் போன்ற தொடர்கதைகளை விட்டு விட்டு நம்மவரின் நாளாந்தப் பிரச்சினைகளை வைத்து எழுதப்படும் கதைகளை வெளியிடுவதல்லவா இன்றைய தேவை.

ந.பூவேந்திரன், லோமார்.

* ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை மையமாக வைத்து ஆபாசமாக எழுதி அதைத் 'தமிழச்சி' என்று வெளியிட்டிருக்கிறீர்களே, இப்படி ஒரு கதையை ஒரு பெண்ணா எழுதினார்?

சிறீ , வீஸ்பாடன்.

* ஆண்டுமலரின் அமைப்பு நன்றாக இருந்தது. எழுத்துப் பிழைகள் திருத்த யாருமே இல்லையா?

குகன் , லூாடிங்சைட்.

* இரண்டு மாதத்துக்கு ஒரு முறை வரும் சஞ்சிகைகளில் தொடர் கதைகளைத் தவிர்த்து என்னைப் போன்றவர்க்கு ஜேர்மனி பற்றிய பிரயோசனமான தகவல்களைத் தாருங்கள்.

துரை , வீஸ்பாடன்.

* குடிகாரக் கணவர்களால் மனைவியர் படும் வேதனையின் சொல்ல முடியாத ஒரு புறத்தை நைஸாக வெளித்தந்த 'சாப்பாட்டுக்கு முதல் ஒருக்கா' கதை நைஸாக இருந்தது.

ஈஸ்வரி , நீடர் ஓல்ம்.

* கறுப்புத்தாலிக்கு ஓவியர் சேகர் தொடர்ந்து வரைந்து வரும் ஓவியங்கள் அருமை! அருமை! பொங்கல் பற்றிய கட்டுரை பல விடயங்களைத் தெரிந்து கொள்ள உதவியது. ஏதோ இந்துக்களின் திருநாள் என்றிருந்த எனக்கு இது தமிழரின் திருநாள் என்று விளக்கிய சகிக்கும் தமிழ்நாதத்துக்கும் நன்றிகள் பல.

ஜெரால்ட் , நூாட்றிங்கன்.

* ஆண்டுமலருக்கு ஐந்து மார்க்காமே! நல்லகாலம்.... நான் சந்தாக் கட்டிவிட்டேன்.

அமலன் , மைனர்ஸ்ஹாகன்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீ

பெயரில்லாமல் வரும் கடிதங்கள், கருத்துக்கள் பிரசுரிக்கப்படமாட்டா! பெயர், விலாசத்துடன் எழுதும் வாசகர் விரும்பினால் அவர்களது கருத்துக்கள், கடிதங்கள் பெயரின்றி வெளியிடப் படலாம்.

ஆ---ர்.

## நெற்றிக்கண்ணைக் காட்டினாலும்...............

ஆசிரியர்,
தமிழ்நாதம்.

கடந்த இதழாக வெளிவந்த ஆண்டுமலரின் அறிமுகம் பகுதியில், மூன்சனில் உள்ள எமது தமிழர் கலாச்சார நலன்புரி மன்றத்தையும், மன்றம் வெளியிட்டு வரும் பண்பாடு சஞ்சிகையையும் அறிமுகம் செய்திருந்தீர்கள். அதில், மன்றம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே பண்பாடு என்ற எமது சஞ்சிகையும் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது என்பதற்கு மாறாக இரண்டாவது நிர்வாக ஆண்டிலேயே பண்பாடு ஆரம்பிக்கப்பட்டது என்று தவறான செய்தியை வெளியிட்டுள்ளீர்கள். மேலும், மூன்சன் நகரில் வாழும் தமிழ் விளையாட்டு வீரர்களை ஒன்று சேர்த்து ஒரு தமிழர் விளையாட்டுக் கழகத்தை ஆரம்பிப்பதற்கு ஆதரவு வழங்கும் நோக்குடனேயே எமது மன்றம், தனது 3வது நிர்வாக ஆண்டில் கிறில்ப் பாட்டி ஒன்றை நடத்தி உணவுப்பண்டங்களை விற்று வந்த வரவை அந்த விளையாட்டுக் குழுவுக்கு ஆரம்ப நிதியாக வழங்கியது. இந்த உண்மைக்கு மாறாக, நாமே விளையாட்டுக் குழுவை ஆரம்பித்ததாகத் தவறான செய்தியை வெளியிட்டுள்ளீர் கள். மேற்படி தவறுகளை ஆசிரியர் குழுவுக்கும் அனைத்து வாசகர்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

த. ந. சிறீதரன்
ஆசிரியர், பண்பாடு.

## "கிரந்தம்" பற்றி ஒரு "கிரந்தம்"

தமிழ்மன்ற நான்காவது ஆண்டு விழாவில் சிறந்த நாடகத்தைத் தயாரித்த நாடகாசிரியர் இடையில் இரட்டை அர்த்தம்படும் வசனங்களைப் புகுத்தியது ஏனோ? நகைச்சுவை தேவைதான்; அதற்காக விரசமான வசனங்களைத் தவிர்த்திருக்கலாம். ஒரு சமூகசீர்திருத்த நாடகத்தில் "நானும் என் மனைவியும் இரவு முழுக்க கஷ்டப்பட்டு செய்து, கொண்டு வந்த புரியாணி" என்ற வசனத்தில் இரவு என்ற வார்த்தையை தவிர்த்திருக்கலாம். நாடகாசிரியர் இது போல் வசனங்களை அடுத்த நாடகத்தில் தரமாட்டார் என்று நம்புவதுடன் வாழ்த்துக்கள். பல புதிய முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையே! உதாரணமாக நாடக இறுதியில் மழலைகள் மூலம் "வணக்கம்" கூறியது நிச்சயம் எல்லோர் மனதையும் தொட்டிருக்கும். தொடர்க.........

ஸ்ரீ - வீஸ்பாடன்

# கண்ணீர் அஞ்சலி

## அன்னையின் மடியில்: 20. 12. 92
## ஆண்டவன் மடியில்: 21. 12. 92

கெட்டதென்றோ இவ்வுலகை எட்டிப்பார்த்த மறுகணமே
விட்டுப்பிரியத் துணிந்தாயோ! மொட்டே மலர மறுத்தாயோ?

ஜேர்மனியின் பிராங்பேட்டில் வசிக்கும் ஈழவரான சிறீகாந்தா & தவேந்திரகுமாரி தம்பதிகளின் ஒரு நாள் வயதேயான குழந்தை மீண்டும் இறைவன் மடியைச் சேர்ந்தது. குழந்தைக்கு எம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், குழந்தையின் பிரிவால் வாடும் பெற்றோருக்கும் உற்றார் உறவினர்க்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவர்கள் அனைவரினதும் மன அமைதிக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

######################

## குழந்தை வடிவில்: 27. 7. 58
## காலனின் பிடியில்: 27. 12. 92

காரில் நீ வரும் வழிதனிலே காலன் வந்து நின்றானோ?
காலன் வாவென்றழைத்தனாற் சரியென நீயும் சென்றாயோ?

ஜேர்மனியின் பிராங்பேட்டில் வசித்து வந்தவரும் ஈழத்தின் வடலியடைப்பைப் (பண்டத்தரிப்பு) பிறப்பிடமாகக் கொண்டவரும் துரையப்பா & அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வருமான யோகேஸ்வரன் அகாலமரணமானார். அன்னாரின் பிரிவால் ஆற்றொணாத் துயரில் வாடும் அவர் பெற்றோருக்கும் உற்றார் உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும், துயரில் வாடும் அனைவரினதும் மன அமைதிக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

#########################

பிறப்பு: தமிழீழம்! வீரமரணம்: இந்து சமுத்திரம்!

நமது தாய் நாட்டின் விடுதலைக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்ததுடன், நடுக்கடலிற் தம் உயிரையும் தந்து கடலிலேயே தம் உடலங்களையும் அழித்துக் கொண்ட கிட்டு தலைமையிலான அனைத்த தேசபக்தர்களுக்கும் எம் இறுதி அஞ்சலியைத் தெரிவித்து, அவர்கள் தம் பிரிவினால் வாடும் அனைவரினதும் மன அமைதிக்காகவும், அவர் தம் தோழரின் தொடர்ந்த உற்சாகமான செயற்பாட்டுக் காகவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

#########################

**"பிறப்பின் முடிவு இறப்பு! இறப்பின் முடிவு பிறப்பு!"**

- பகவத்கீதை -

# இது கதை அல்ல!




**கா**ரை நிறுத்திவிட்டு இறங்கிக் கதவைச் சாத்தும் போதுதான் அவன் துாரத்தில் வேகமாகத் தன்னை நோக்கி வந்த அந்த மோட்டார் சைக்கிளைக் கண்டான். மூளையில்ப் பொறி பறந்தது. காருக்கு மேலாகத் தாண்டி மற்றப்பக்கம் நிலத்தில் விழுந்து உருண்டு பிரளவும், மோட்டார் சைக்கிளிற் பின்னுக்கு இருந்தவன் கைகளில் இருந்த இயந்திரத்துப்பாக்கி படபடபட என்று கத்திக் கொண்டே குண்டுகளைக் கக்கவும் சரியாக இருந்தது. வேகமாகத் தாண்டிப் போய்விட்ட மோட்டார் சைக்கிளைப் பார்த்து ஏதேதோ ஆங்கில வார்த்தைகளால்த் துாஷித்தபடியே மண்ணைத் தட்டிவிட்டு எழுந்தான் ஆர்னோல்ட் ஷ்வார்ட்ஸநேகர். படம் இப்போதுதான் சூடு பிடிக்க ஆரம்பித்திருந்தது. இந்தச் சமயம் பார்த்துத்

தானா ரெலிபோன் கதற வேண்டும்? இரவு வேலைக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்த மனைவியிடம் கையைக் காட்டினேன்;நான் நித்திரை என்று கூறும் படி சைகையும் செய்தேன். ஆனால் ரிசீவரை எடுத்து ஹலோ என்றதுமே .........."ஓம், இருக்கிறார்....சும்மாதான் டீ. வி. பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று கூறிய அவள் கண்களிற் பழிவாங்கும் குறும்புணர்வு தான் தெரிந்தது. ஷிப்ட் வேலை செய்கிறாள் என் மனைவி, தான் வேலைக்குப் போக நான் மட்டும் படம் பார்க்க.. ..தன் வயிற்றெரிச்சலை இப்படியாவது தீர்த்துக் கொள்கிறாள். "பொறு உன்னைப் பிறகு கவனிக்கிறேன்". என் கண்களின் வார்த்தைகளைக் காதலித்த போது தெரிந்து கொண்டவள் கல்யாணமாகி இந்த ஏழு வருடங்களின் பின் அதன் அர்த்தமே புரியாதவள் போலல்லவா நடந்து வருகிறாள். என்ன செய்வது? ...காதல் ஒரு உலகம்..... கல்யாணம் வேறு உலகம்......!

டீ. வியில் சத்தத்தைக் குறைத்துவிட்டு ரெலிபோனைக் காதுக்கருகில் கொண்டு போனேன். "என்னப்பா என்ன செய்யிறீர்? ஆண்டுமலர் வரப்போகுதெல்லே, நீர் இன்னும் ஒரு ஆக்கமும் தரேல்லை. பத்திரிகைக் குழுவுக்குள்ளை வரவேணும் வரவேணும் எண்டு சண்டைப் பிடிப்பியள் . வந்தாப் பிறகு நித்திரையே கொள்ளுறியள்?முதல் தாள்ளை பேர் மட்டும் போட்டிட வேணும் எண்ட ஆசை மட்டும் இருந்தாப் போதா து. பொறுப்பையும் கவனிக்கத் தெரிய வேணுமெல்லே. " தமிழ்நாதம் பத்திரிகாசிரியரின் கணீரென்ற குரல் என் காதுக்குட் குடைந்தது. ஆர்னோல்ட் ஷ்வார்ட்ஸநேகரின் ஒரு தோளில் அந்த அழகு பிம்பம். மற்றத் தோளில் ஒரு பென்னாம் பெரிய இயந்திரத் துப்பாக்கி...........வயிற்றெரிச்சலாக இருந்தது எனக்கு. வீடியோவிலென்றால் நிற்பாட்டிவிட்டுப் பிறகு பார்க்கலாம். டீ. வியிலல்லவா இந்தப் படம். "கண்டறியாத ஒரு பத்திரிகையும் அதற்கு ஒரு ஆசிரியரும்!"மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்;சொல்லவில்லை.

"நல்லொரு ஐடியா இருக்கு, அதை எழுதவும் தொடங்கீட்டன், வடிவா முடிச்சிட்டுத் தாறனே" ஒரு பொய்யைச் சொல்லி நான் குழைந்தேன்;அவர் குரைத்தார். "கடைசி நிமிஷத்திலை கொண்டு வரப்போறீரோ?யோசினை எண்ட சாமான் உமக்குக் கொஞ்சமும் இல்லையே!நான் தான் ஆக்கங்களுக்காக ஆக்களைத் தேட வேணும். பிறகு அதைக் கொம்பியூட்டரிலை அடிக்க இன்னும் ஆக்களைத் தேடிப்பிடிக்க வேணும். எங்கடை பத்திரிகையிலை விளம்பரம் செய்துதான் வியாபாரம் நடக்க வேணும் எண்ட நிலை இல்லாட்டாலும் ஒரு தமிழ்ச் சஞ்சிகை நல்லாய் நடக்கட்டும் எண்டு விளம்பரங்கள் தரக்கூடிய வியாபார நிலையங்களைத் தேடிப் பிடிக்க வேணும் கடைசி நேரத்திலை எல்லாத்தையும் பிரின்ட் பண்ணி எழுத்துப்பிழை திருத்தி ........எல்லாம் ஒரே

இரவிலை செய்யிறதாலை தானே இவ்வளவு எழுத்துப்பிழையள். சனம் பாவம்! எழுத்துப்பிழை எண்டு சொல்லச் சொல்ல நாங்களும் எத்தினை நாளைக்குத்தான் கொம்பியூட்டரிலை சாட்டுகிறது? அடிச்சதை வெட் டி....ஒட்டி....கொப்பி....அடிச்சு.....ஸ்டேப்பிள் பண்ணி......எத் தினை வேலை கிடக்கு ? நீரென்னெண்டா இனித் தான் எழுதி முடிக் கப் போறீரோ?நீர் பத்திரிகைக்குழுவிலை இருந்து என்னதான் செய்யிறீர்? எல்லாம் பேருக்காகத்தானே!"

ஆர்னோல்டைக் கொலை செய்ய வில்லன் ஏதோ திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். எனக்கோ அவன் வில்லனாகத் தெரியவில்லை;நல்ல படமொன்றைப் பார்க்க விடாத இந்தப் பத்திராதிபர் தான் வில்லனாகத் தெரிந்தார்.

"இங்கை பிறகு என்னோடை குறை நினைக்கக்கூடாது, வெறும் வெள்ளைப்பேப்பராய் ஒரு நாலைஞ்சு தாளை விட்டிட்டு உரிய நேரத் தில் இந்த இடத்திற்கான ஆக்கத்தை ஒற்றன் அனுப்பி வைக்கவில்லை எண்டு பிரின்ட் பண்ணக் குடுத்திடுவன்". அவருக்கு மூச்சு வாங்கியது. - செய்தாலும் செய்திடுவார் இந்த மனிசன். அவ்வளவு கண்டிப்பானவர். - ஆனாலும் மிகவும் நல்லவர். அவர் சொல்வதெல்லாம் நியாயமும் தான். "தெரியுந்தானே... நான் தருவன், வெள்ளிக்கிழமை கட்டாயம்." நான் சமாளிக்கப் பார்க்க, "எந்த வெள்ளி? 1994ல் வாற ஏதன் ஒரு வெள்ளி யோ?அவர் குரலில் நளினத்துடன் கூடிய நக்கலும் தெரிந்தது. அவர் சொல்றதும் நியாயந்தான். நானும் இப்படி எத்தனை வெள்ளிகளை அவருக்குக் காட்டிவிட்டேன். பாவம் அவருக்கு இந்தப் பத்திரிகை இரண்டாந்தாரம் மாதிரி. எவ்வளவு ஆசையாக, ஆவலோடு இதை நடத்தி வருகிறார் என்பது எனக்கும் தெரியும். இரவிரவாக நித்திரை முழித்து, அங்கிங்கே எல்லாம் ரெலிபோன் செய்து, அவரையும் இவரையும் ஆக்கங்கள் கேட்டு.......அடடடடா....இந்தப் பத்திரிகையின் முன் னேற்றத்திலும் பத்திரிகையை உரிய நேரத்தில் வெளிக்கொண்டு வருவ திலும் அவர் வைத்திருக்கும் ஆர்வம் எனக்கு வராது; வரவே வராது! இருந்தாலும்...... ஆர்னோல்டின் இறுகிப் பரந்த மார்பில் அநத அழகு பிம்பம் சாய்ந்திருக்க, ஆடையில்லாத அவள் மேனியை அவளது பொன் னிறத் தலைமயிர் மறைத்திருக்க......... இந்தாளை எப்படியாவது காய்வெட்ட வேண்டும் என்று நான் யோசித்தேன். அவருக்கு என் மனநிலை புரிந்துவிட்டதா, என்ன?

"வடிவாய்க் கேளும், உங்கடை தொல்லை எனக்கு வேண்டாம். நான் தான் காய் வெட்டப் போறன். இந்த முறையோடை எனக்கு இந்தப் பத்திரிகை ஆசை போயிட்டுது. பேர்தான் வேணும் எண்டனியளெல் லாருமாய்ச் சேர்ந்து உங்கடை பேர்களைப் பக்கம் பக்கமாய்ப் போட்டு

வெளியிடுங்கோ...நான் ஒதுங்கிக்கொள்றன்."அவரின் குரல் தளுதளுத்தது."எனக்குச் சின்னனிலை இருந்து தமிழ், தமிழ் எண்டு பைத்தியம். நாடகம், கதை, கவிதை, பத்திரிகைகளுக்கு எழுதுறது, இந்துமன்றங்கள், தமிழ்ச்சங்கங்கள் எண்டே என்ரை வாழ்க்கை போயிட்டுது. ஒத்துழைப்புத்தர ஆக்களில்லை. ஆனால், குறை சொல்ல மட்டும் பத்தாயிரம் பேர் வருவியள்." தளுதளுத்த அவர் குரலின் வார்த்தைகள் தடங்கித் தடங்கி வெளிவந்தன:"புத்தகம் விக்கிறதெண்டால்க் கூட உமக்கு கேவலமாகப் போட்டுது". என் மனச்சாட்சி என்னைச் சுட்டது."ஒரு தரமான நல்லதான சிறந்த பத்திரிகை ஒண்டை நடத்தவேண்டுமெண்டது தான் என்ரை விருப்பம். அதுக்கு உங்கடை உதவி இல்லாமல் ........." வார்த்தைகள் வெளிவராமலே நின்று விட்டன. பாவம் ஒரு தரமான சஞ்சிகையை நடத்த வேண்டும் என்ற அவர் இலட்சியம் சிதைவது எனக்குத் தெரிந்தது. என் மனத்திரையில் அவர் கண்களைத் துடைத்துவிட்டுக் கொள்வது தெரிந்தது. பத்திரிகைக் குழுவில் என் பெயர் இருக்க வேண்டும்;நான் எதுவும் செய்யாமல் இருந்தாலும் பரவாயில்லை......என்ற என் போலிக் கௌரவ ஆசை தூள் தூளாகச் சிதறியது. என் சோம்பல், பஞ்சியாவுமே பறந்தன. "ஹலோ, ஹலோ" என்று நான் கத்தியது வீண். மறுபக்கத் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. ரீ. வியைப் பாத்தேன் . ஆர்னோல்ட் தன் கையிலருந்த கிரனைட்களை ஆக்ரோஷமாக எறிந்து கொண்டிருந்தான். எதிரிகள் சிதறி வெடித்துச் செத்துப் போனார்கள்.

நான் பேனாவையும் பேப்பரையும் எடுத்தேன். ஆர்னோல்ட் என்னைப் பார்த்துத்'தம்ஸ் அப்'(Thumps up) வெற்றிச் சின்னத்தைக் காட்டினான்.

ஆரம்பத்திலேயே கூறிவிட்டேன் இது கதையல்ல! சமர்ப்பணம்! கையெழுத்துப் பிரதியாகத் தொடக்கப்பட்டு இன்று மூன்றாம் ஆண்டிற் காலடியெடுத்து வைத்திருக்கும் தமிழ்நாதம் சஞ்சிகை இந்தளவு வளர்ந்ததற்கு உங்கள் ஒத்துழைப்பே முக்கிய காரணம்! எழுத்தாளர்கள், ஓவியர்கள், - கையெழுத்துப்பிரதியாக எழுதித்தந்தவர், கொம்பியூட்டர் அச்சகத்தினர், - அவருக்கு உதவியான ஏனையோர், விளம்பரதாரர்கள், வாசகர்கள் முக்கியமாக விமர்சகர்கள் ஆகியோரின் ஆதரவின்றி இப்படியான ஒரு சஞ்சிகையை வெளிக்கொணர்வது கடினம், கடினம், கடினம்! எனவே இச்சமர்பபணத்தை உங்கள் முன் வைத்து, அதே வேளையில் ஒரு சஞ்சிகையை வெளிக்கொணர்வதில் உள்ள சிரமங்களை இந்த முற்றிலும் கற்பனையான சம்பவக் கோர்வை மூலம் உங்கள் முன் எடுத்துக்காட்ட எடுக்கப்பட்ட முயற்சியே இது.

,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

கொப்ளென்ஸ் நகரம் 1992ம் ஆண்டில் தனது 2000 ஆவது பிறந்த வருடத்தைச் சிறப்பான முறையிற் கொண்டாடியது.

# தைப்பொங்கற் திருநாள்! இது தமிழர் பெருநாள்!

தமிழர் தம் பெருநாட்களில் தைப் பொங்கற் திருநாள் முதன்மையானது, முக்கியத்துவம் வாய்ந்தது. தட்சணாய காலம் தணிந்து, உத்தராயண காலத்தின் உதயம்! அந்த உதயத்தினால் உவகை கொள்ளும் உழவனின் உள்ளப் பூரிப்பு! இந்தப் பூரிப்பைத் தெரிவிக்கும் திருநாள்த் தான் தைத்திங்களின் முதலாம் நாளான பொங்கற் பெருநாள்! ஆம், உழவன் உவகை கொள்வதில் அர்த்தம் உண்டு.

ஆறுமாத காலம் ஆற்றிலும் சேற்றிலும் அலைந்து காட்டையும், மேட்டையும் பண்செய்து பயிரிடுகிறான் உழவன். அதற்காக அவன் பட்ட துன்பங்கள், துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஈற்றிலே, பயன் பெறுகின்ற காலத்தை அடைகின்ற பொழுது -பட்ட துன்பங்கள் விட்டகல்கின்ற பொழுது -மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு பொங்கிப் படைக்கின்றான் பைந்தமிழ் உழவன்.

உழவன் கொள்ளும் உவகைக்கு இன்னும் அர்த்தங்கள் உண்டு. அதனை ஔவையார் அழகான முறையிற் செப்பியுள்ளார். அதிகமான் என்ற அரசனை ஔவையார் வாழ்த்திய பொழுது "வரப்புயர" என்று வாழ்த்தி விட்டு அரசவையிலே அமர்ந்து விடுகிறார். அவையிலே அமர்ந்திருந்த மற்றவர்களுக்கோ புரியவில்லை வரப்புயர என்ற பதத்தின் கருத்து! புரவலர் விழித்தனர்; புலவர்கள் முழித்தனர்! வேறு வழியின்றி, " ஔவையே! "வரப்புயர" என்பதன் அர்த்தந்தான் என்ன?" என்று கேட்டான் அதிகமான். அதற்கு ஔவையார்

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோன் உயர்வான்"

என்று பாடி முடித்தார்.

அதாவது வயல்களின் வரம்புகள் உயர வேண்டும்; வரம்புகள் உயர்ந்தால் வயலிலுள்ள நீர்மட்டம் உயர அதனால் நெல் செழிப்பாக வளர்ந்து செம்மையான விளைச்சலைக் கொடுக்கும். நல்ல விளைச்ச

லால் நாட்டு மக்களின் வாழ்வு செழிக்கும். நாட்டு மக்கள் செழிப்பாக வாழ்ந்தால் அரசனின் திறைசேரி நிரம்பி வழியும். இதுவே வரப்புயர என்பதற்கு ஔவையார் தந்த அழகான விளக்கம்.

இந்த வகையிலே அரசனையும் அவனது குடிமக்களையும் வாழ வைப்பவர்கள், உயர வைப்பவர்கள் உழவர்களே! இவர்கள் அறுவடை முடிந்ததும் மற்றவர்களுடன் சேர்ந்து பொங்கி மகிழ்வதில் அர்த்தம் உண்டு! தவிர, உலகை உய்விக்கின்ற தொழில் உழவுத் தொழில் என்பதினாற்றான்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று பாடினான் பாரதி!

இன்னும் ஒரு இடத்தில் ஔவையார்,

"உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்று பாடி உழவுத் தொழிலின் சுதந்திரத்தை விதந்துரைத்திருக்கி றார். வேறொரு பாவலரோ ஏர் பிடிக்கும் காராளர் கைதான் உலகத்து உயிர்களைக் காக்கின்றது என்று பாடியுள்ளார். "மேழிச் செல்வம் கோழை படாது" என்பது பழமொழி. இத்துணைச் சிறப்பு மிக்க உழவுத் தொழிலுக்கு விழா எடுத்து மகிழ்வது தமிழரின் தனிச்சிறப்பே!

வேறொரு வகையிலும் தைப்பொங்கற் திருநாள் தமிழனுக்குப் பெருமை தேடித் தருகின்றது. நன்றியறிதல் என்றால் என்னவென்று எடுத்தியம்புகின்றன தைப்பொங்கற்றிருநாளும், அடுத்த நாளாக வரும் பட்டிப் பொங்கற் பெருநாளும். ஆம், அதிக விளைச்சலைக் கொண்ட அறுவடையைப் பெறுவதற்கு ஆதாரமாக விளங்கிய ஆதவனுக்கும், அடுத்துதவிய மாடுகளுக்கும் அறுவடை செய்த புத்தரிசி கொண்டு " பொங்கலோ பொங்கல் " என்று பொங்கி மகிழ்கின்றனர்.

பொங்கிய பொங்கலோடு அறுசுவை கொண்ட கறிவகைகளும், தீன் சுவை கொண்ட கனிவகைகளும், இனிக்கும் கரும்பும், இளநீரும், களனி யிலே விளைந்த இஞ்சியும் மஞ்சளும் பரவிப் படைத்துப் பகலவனைப் போற்றிப் பணிகின்றனர் பண்பட்ட தமிழர். தொன்று தொட்டு வரும் நன்றிக் கடன் செலுத்தும் இந்த நல்ல பண்பு இத்துடன் நின்று விட வில்லை.

களனியிலே கடைசி வரை நின்றுழைத்த காளைகளுக்கும் பாலைத் தந்துதவிய பசுக்களுக்கும் பட்டிப் பொங்கல் விழாவெடுத்துப் பண்பாட் டின் சிகரமாக விளங்குகிறது தமிழர் சமுதாயம். களனியை உழுவதற்கும்

உரத்தைத் தருவதற்கும் உதவிய காளைகளுக்கு அறுவடையை அடிப்பதற்கும் அடித்த அறுவடையை அகத்திலே கொணர்ந்து சேர்ப்பதற்கும் உறுதுணையாக நின்றுதவிய எருதுகளுக்கும், நிறையுணவாம் பாலுணவைக் குறையாது தரும் பசுக்களுக்கும் பட்டிப் பொங்கல் வைத்துப் பண்பட்ட நன்றியறிதலைச் செலுத்துகிறது தமிழர் சமுதாயம்.

"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க நன்றி மறவாத சமுதாயமாக வாழ்ந்து வருகிறது நமது தமிழ்ச் சமுதாயம்!

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டுமென்று அன்று பாரதி கண்ட கனவை நனவாக்கிக் கொண்டிருக்கின்றது இன்றைய ஈழத்தமிழினம். ஆம்! இன்று ஐரோப்பிய, அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளிலும் மத்திய கிழக்கு, கீழைத்தேச நாடுகளிலும் தொழில்ரீதியாகவும் அகதிகளாகவும் குடியேறியுள்ள ஈழத்தமிழர் ஆளப்பிறந்த தமிழை அரங்கேற்றிக்கொண்டிருக்கிறார்கள். தமிழரோடு தமிழர் தம் பண்பாடும் கலை கலாச்சாரமும் கூடவே சென்று குவலயம் எங்கும் கொடிகட்டிப் பறக்கின்றன. எங்கெல்லாம் இன்று தமிழர்கள் உலகில் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் பொங்கல் பொங்கப்படுவதால் இன்று வையத்தில் தைப்பொங்கல் பொங்கப்படாத இடமே இல்லையென்று சொல்லலாம்.

என்றோ ஒரு நாள் ஒப்பற்ற மொழியாம் தமிழ் மொழியைப் பன்னாட்டு மொழிகளுள் ஒன்றாக உலகம் அங்கீகரிக்கத்தான் போகிறது. அது கண்டு தமிழரெல்லோரும் தலை நிமிர்ந்து பெருமைப்படுகின்ற காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்தத் தைப்பொங்கற் திருநாளிலே உலகத் தமிழர் அனைவருக்கும் ஓர் உருக்கமான வேண்டுகோள்! பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் துதிப்பது தமிழர் எம் பண்பாடுகளிற் தலை சிறந்ததொன்றல்லவோ! இன்று நம் தாய்த்திருநாடாம் தமிழீழத்தில் பொங்கல் நடக்கவில்லை, பொங்கியெழும் வீரம் நடைபோடுகிறது! விடுதலைக்காக, அடிமைத் தளையை அகற்றுவதற்காக ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் தம்முயிரை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மறுபுறத்திலோ எதிரியின் ஆதிக்க வெறியும் அடக்குமுறையும் அப்பாவித் தமிழர்களை அழித்துக் கொண்டிருக்கின்றன. சாந்தி, சமாதானம் என்று உதட்டளவில் உலகுக்குக் கூறிக்கொண்டு சகோதரத் தமிழர்களுக்குச் சாப்பாட்டுச் சாமான்களையே அனுப்பாது சாகடித்துக்

கொண்டிருக்கிறது இனவெறி பிடித்த இலங்கை அரசு. தண்தமிழீழம் எங்கும் குண்டுமாரி பொழிந்து, குடிமனைகளை அழித்து, குடிமக்களை விரட்டி அகதிகளாக்கி அடிமைகளாக்கிக் கொண்டிருக்கிறது கொடிய அரசு. ஈழத்தமிழகமெங்கும் இழவு வீடுகளும் இடிபாடுகளும் சுடுகாடு களுந் தான் காட்சி தருகின்றன.

இந்த நிலையிலே இத் தைப்பொங்கற் திருநாளில் உலகத் தமிழர்க ளெல்லோரும் ஸ்தாபனரீதியாக ஒன்றிணைதல் வேண்டும். இலங்கை அரசு ஈழத்தமிழர்கட்கு இழைக்கும் இன்னல்களை, இனப்படுகொலை களை உலகமெல்லாம் உணரும் வகை செய்தல் வேண்டும். உணவு, - உடை போன்ற பொருட்களைச் சேகரித்து , சர்வதேச தர்ம ஸ்தாபனங் களூடாக, சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுத் தவிக்கும் நம் சகோதரத் தமிழர்கட்குச் சென்றடையச் செய்தல் வேண்டும். இது தான் தைப் பொங்கற் திருநாளில் சர்வதேசத் தமிழர் செய்யவேண்டிய மிகப் பெரிய கடமையாகும்.

## "வாழ்க தமிழினம்! ஓங்குக தைப்பொங்கல் விழா!"

தவேந்திரா - ஹனவ்.

## சைவசமயகுரவரின் வயது

அளவையூர் தி. லம்போதரன்

தேவாரம் பாடிய மூவரான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய அடியார்களும் திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரும் எவ்வளவு வயது வரை வாழ்ந்தார்கள் என்பதைப் பெருந்தொகையிலுள்ள ஒரு செய்யுள் பின்வருமாறு விளக்குகிறது:

அப்பருக் கெண்பத் தொன்றருள் வாதவூரர்க்குச்
செப்பிய நாலேட்டிற் தெய்வீகம் இப்புவியின்
சுந்தரர்க்கு மூவாறு தொன் ஞானசம்பந்தர்க்
கந்தம் பதினாறறி.

அப்பர் எண்பத்தொரு வயது வரையிலும், வாதவூரர் முப்பத்திரண்டாண்டுக ளும், சுந்தரர் பதினெட்டாண்டுகளும், ஞானசம்பந்தர் பதினாறு ஆண்டுகளும் வாழ்ந்தார்களாம்.

0000000000000000000000000000000000000000000

மனிதனுக்கு நாணயம் மிக, மிக முக்கியம். (ஒரு வேளை அது அமெ ரிக்க நாணயமோ?)

சபா, மொண்ட்றியேல்.

# வேலை என்பது..................



- சஞ்சயன் -

## வேலை என்ற சொல் எதைக் குறிக்கின்றது?

ஒரு அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் தொழில் ரீதியாக மேற்கொள்ளப்படும் வேலையாக இருந்தாலும் சரி, வேலை என்ற கருத்தோடு நோக்கப்படாது வீட்டிலோ அல்லது வெளியிலோ பொழுதுபோக்காக மேற்கொள்ளப்படும் ஏதாவது ஒரு செயற்பாடாக இருந்தாலும் சரி இரண்டுமே ஒரே விதமான படிமுறைகளைத் தான் கைக்கொள்கின்றன. வேலை என்பது என்ன? இதுதான் இங்கே எழுப்பப்படக்கூடிய முதல் வினா. ஏதாவது ஒரு விளைவை அல்லது முடிவை நோக்கமாகக் கொண்டு அதற்குரிய மூலப் பொருட்களிலிருந்து பல செயற்பாடுகளினூடாக அந்த முடிவை எய்துவதே வேலை ஆகும். இம்முடிவு நன்மை கருதுவதாகவோ அல்லது தீமையான விளைவுகளை நோக்கமாகக் கொண்டதாகவோ இருக்கலாம். ஆனால் இரண்டுமே வேலை என்ற முறையில் ஒரே விதமாகத்தான் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு வேலையை நிறைவேற்றுவதற்குப் பல படிமுறைகள் கைக்கெள்ளப்பட வேண்டும். அப்படியானால், இப் படிமுறைகள் யாவை? அவை வேலைக்கு வேலை மாறுபடக்கூடுமா? என்ற கேள்விகள் மீண்டும் எழுகின்றன. எந்த ஒரு வேலையானாலும், ஒரே ஒழுங்குமுறையில் வரிசைப்படுத்தப்பட்ட ஆறு படிமுறைகள் கையாளப்பட வேண்டும். அப்போது தான் ஒரு வேலையின் விளைவை நாம் பரிபூரணமாகப் பெற்றுக் கொள்ளவோ அல்லது அனுபவிக்கவோ முடியும்.

இந்த ஆறு படிமுறைகளும் யாவை?

1. சிந்திப்பதும் திட்டமிடுதலும்:

ஒரு வேலையின் விளைவு அதன் பயன்கள், அதற்குரிய மூலப்பொருட்கள், கருவிகள் என்பன பற்றிய தெளிவான சிந்தனை, இவை எவ்விதம் எவ்வொழுங்கில் எந்தளவு பிரயோகிக்கப்பட வேண்டும் என்பன பற்றித் திட்டமிடுதலே முதற் படிமுறையாகும்.

2. ஒன்றுதிரட்டுதல்:

ஒரு வேலையை மேற்கொள்ளுவதற்குரிய மனிதசக்தி, மூலப்பொருட்கள், வளங்கள் என்பவற்றை வேலைமேற்கொள்ளப்படக் கூடிய வேலைத்தளத்தில் ஒன்றுதிரட்டல் இரண்டாவது படிமுறையாகும்.

3. கருவிகளின் தெரிவும் கையிருப்பும்:

ஒவ்வொரு வேலைக்குமுரிய கருவிகளைத் தெரிவு செய்வதும் அவற்றை மூலப்பொருட்களுக்கும் மனித வளத்திற்கும் ஏற்றவாறு ஒன்று திரட்டுவதும் மூன்றாவது படிமுறையாகும். (இந்தப் படிமுறை ஒன்று திரட்டுதல் என்ற இரண்டாவது படிமுறையினுள் அடங்குவதுபோல் இருந்தாலும் உண்மையில் அப்படியல்ல. ஏனென்றால், ஒவ்வொரு வேலைக்கும் உரிய மூலப்பொருட்களின் கூட்டும் வெவ்வேறு விதமாக அமையக்கூடும். எனவே இவற்றின் ஒன்றுதிரட்டலின் பின்னரே அவற்றுக்கு ஏற்ற கருவிகள் தெரிவு செய்யப்படுவது சாத்தியமாகும்.) இவ்வாறு பொருத்தமான கருவிகளின் தெரிவினதும் கையிருப்பினதும் பின்னர் தான் அக் கருவிகள் மூலப்பொருட்களிற் பிரயோகிக்கத் தக்கவாறு அமைகின்றன.

4. கருவிகளின் பிரயோகம்:

மேற்கண்டவாறு தெரிவு செய்யப்பட்ட கருவிகள் மனிதசக்தியினால் மூலப்பொருட்களிற் பிரயோகிக்கப்பட்டு மூலப்பொருள் விளைவு என்ற படியை நோக்கி நகர்த்தப்படுதல் நான்காவது படிமுறையாகும். இந்தப் படிமுறையில் சக்திப்பிரயோகம் அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

5. கட்டுப்படுத்தல்:

கருவிகளின் பிரயோகத்தினால் மூலப்பொருட்களில் ஏற்படுத்தப் படுகின்ற மாற்றங்கள் திட்டமிட்ட முறையில் அமைகின்றனவா என்பதற்குக் கட்டுப்படுத்தல் என்ற இந்த ஐந்தாவது படிமுறை அவசியமாகின்றது. மூலப்பொருட்களில் கருவிகளின் பிரயோகத்தின் போது இப் படிமுறை எப்போதுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. தகவற்பரிமாற்றம்:

எந்த வேலையுமே படிப்படியான வழிமுறைகளால் ஒரு விளைவை நோக்கி நகர்த்தப்படுவதால் இந்தப் படிமுறைகளுக்கிடையே தகவற்பரிமாற்றம் மிகவும் அத்தியாவசியமாகின்றது. ஒரு தனி மனிதரால் இந்தப் படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டாலும் சரி அல்லது வெவ்வேறு பல மனிதர்களால் இப் படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டாலும் சரியே, ஒவ்வொரு படிமுறையின் போதும் மூலப்பொருளில் ஏற்பட்டிருக்கக் கூடிய மாற்றம் (மாற்றங்கள்) அடுத்த படிமுறை ஆரம்ப

மாவதற்கு முன்னரே அறியப்பட்டு இத்தகவல் பரிமாறப்பட்டிருக்க வேண்டும். இதுவே ஒரு வேலையோடு சம்பந்தப்பட்ட ஆறாவதும் இறுதியானதுமான படிமுறை ஆகும்.

(சிந்தித்தலும் திட்டமிடுதலும் என்ற முதற்படிமுறை இரண்டு வேறுபட்ட படிமுறைகளாகக் கருதப்படுவதும் உண்டு. அப்படிக் கணிக்கப்படும் பட்சத்தில் ஒரு வேலையானது ஏழு படிமுறைகளைக் கொண்டிருக்கும்.)

இனி, இந்தச் சஞ்சிகையை உருவாக்குவதில், அதாவது காகிதம் என்ற மூலப்பொருளிலிருந்து இச் சஞ்சிகை உருவாக்கப்பட்டதில் வேலை என்ற தொழிற்பாடு எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்று பார்ப்போம்.

தமிழ்நாதம் என்று ஒரு சஞ்சிகை என்றும் அது எப்படியான ஒரு சஞ்சிகையாக இருக்க வேண்டுமென்றும் ஒரு குழுவால் சிந்திக்கப்படுகின்றது. அடுத்ததாக யார்யாரால் எழுதப்பட்டு எந்தெந்த ஆக்கங்கள் இடம் பெறவேண்டும், அவற்றை ஒரு இதழாக எவ்வாறு தொகுக்கலாம், யாரால் எப்போது அச்சிடப்பட வேண்டும் என்றெல்லாம் திட்டமிடப் படுகின்றது.

சஞ்சிகைக்குத் தேவையான காகிதம், மை என்ற மூலப்பொருட்களும், சகல பணிகளை ஆற்றுவதற்குத் தேவையான மனித சக்தியும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இதுவே இரண்டாம் படிமுறையான ஒன்றுதிரட்டுதல் ஆகும்.

இனி மனித சக்தியைப் பாவித்து, மூலப்பொருளான காகிதத்தை ஒரு முழுமையான தமிழ்நாதம் இதழாக ஆக்குவதற்குத் தேவையான கருவிகளான எழுதுகருவிகளாகக் கொம்பியூட்டரும், அது சார்ந்த ஏனைய கருவிகளும், எழுத்துவடிவம்(computer program) என்பனவும் தெரிவு செய்யப்பட்டுத் திரட்டப்படுவது தெரிவும் கையிருப்பும் என்ற மூன்றாவது படிமுறை.

கருவிகளின் பிரயோகம் என்ற நான்காம் படிமுறைக்குள் எழுதுவது, அச்சிடுவது, வரைவது போன்றவை அடங்குகின்றன.

கருத்துப்பிழைகள், எழுத்துப்பிழைகள், புத்தகத்தைத் தொகுக்கும் போது ஏற்படக்கூடிய தவறுகள் என்பவற்றை அடையாளம் கண்டு திருத்திக் கொள்வது கட்டுப்படுத்தல் என்ற ஐந்தாம் படிமுறை ஆகும்.

இப்படியாக வெளிவரும் ஒரு இதழ் ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிந்தனைகட்கும் திட்டங்களுக்கும் ஏற்ப அமைந்துள்ளதா என ஆசிரியர் குழு அச்சிடுபவர்களோடு கொள்ளும் தொடர்புகளே இறுதியான ஆறாவது படிமுறையான தகவற்பரிமாற்றமாகும். இந்தத் தகவற்பரிமாற்றத்தின் போது இவ் வேலை என்ற தொழிற்பாடு எவ்விதம் படிப்படியாக முன்னேறியிருக்கின்றது என்று அவதானிக்கப்

பட்டு ஏதும் தவறுகள் நேர்ந்திருக்கும் பட்சத்தில் அப் படிமுறை செவ்வனே திருத்தியமைக்கப்பட்டு, இப் படிமுறையைத் தொடர்கின்ற மற்றைய படிமுறைகள் மீண்டும் கைக்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறே ஒரு வேலையினூடாக ஒரு மூலப்பொருள் ஒரு விளைபொருளாக மாற்றம் பெறுகின்றது.

இங்கே விபரிக்கப்பட்ட ஆறு (அல்லது ஏழு) படிமுறைகளில் சிந்திப்பதற்கும் திட்டமிடுவதற்கும் கூட கொம்பியூட்டர்கள் உதவி புரிகின்றன. சிந்தித்தல் என்ற பகுதியை மனிதன் மட்டுமே மேற்கொண்டாலும் திட்டமிடுதல் என்ற பகுதிக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கொம்பியூட்டர்த் தொழில் நுட்பங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொரு வேலைக்குமுரிய திட்டங்களைத் தாமாகவே தெரிவு செய்து ஒழுங்குபடுத்தும் திறனுடையவை. ஒன்று திரட்டலுக்காகப் பல வகையான போக்குவரத்துச் சாதனங்களும் நகரும் பட்டிகளும் படிகளும் உள்ளன.

கருவிகளின் பிரயோகத்துக்காகவென்றே பல்லாயிரக் கணக்கான இயந்திரங்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் தொழிற்பாட்டுக்கான சக்தியைப் பெறப் பல வழிமுறைகள் கையாளப்படுகின்றன. அணுசக்தி நிலையங்கள், நீர்மின் நிலையங்கள், சூரியசக்தி நிலையங்கள் போன்றவை சில.

இங்கு தோற்றுவிக்கப்படும் சக்தியின் உதவியோடு கருவிகள் மூலப்பொருட்களிற் பிரயோகிக்கப்படுகின்றன.

தகவற்பரிமாற்றத்துக்காகத் தொலைதொடர்புச்சாதனங்கள், கடிதப்போக்குவரத்துகள், செய்மதிகள், வாய்மொழிக் கலந்துரையாடல்கள், கொம்பியூட்டர்கள் என்பன உள்ளன.

கருவிகளின் கையிருப்பும் கட்டுப்படுத்தலும் என்ற இவ்விரு படிமுறைகளிலும் மனிதனுடைய பங்களிப்பு மிக மிக அவசியமாக அமைந்திருக்கின்றது. இவற்றை இயந்திரங்கள் மூலம் மேற்கொள்வது இதுவரை சாத்தியமாகவில்லை. ஆனால் இவற்றுக்கான இயந்திரங்களைக் கண்டுபிடித்து நிர்மாணிப்பது இந்நூற்றாண்டின் ஒரு சவாலாகவே கருதப்படுகின்றது.

WWWWWWWWWWOOOOOOOOOORRRRRRRRKKKKKKKKK



A: டேய் மடையா, இந்த துப்பாக்கியாலா முயலைச் சுடப் போகிறாய்?

B: ஆமாம். ஏன்?

A: இதிலதான் குண்டு ஒன்றும் இல்லையே.

B: இது அந்த முயலுக்குத் தெரியாதே!

- ஸ்ரீ -

ஆசிரியை: "நைட் ரேட்"டுகளைப்பற்றி ஒரு குறிப்பு சொல்.
மாணவன்: அவை "பகல் ரேட்"டுகளைவிட குறைவானவை.

- ஸ்ரீ -



# ஒரு தாயின் கனவு

எங்கள் மண்ணில்... யாழ்ப்பாணத்தில்
நானும் குடும்பம் நடத்தியிருந்தால்...
என் பிள்ளைகள் பற்றிக் கனவுகள் எல்லாம்
எப்படியோ இருந்திருக்கும்.
எஞ்சினியராக... டொக்ரராக...
கொம்பியூட்டரில் விற்பனராக..
அடுத்தது என்ன? எக்கவுண்டனாக.. ஆசானாக..
எப்படியும் நல்லதோர் பிரஜையாக...
இப்படியே என் கனவு நீண்டிருக்கும்.

நானோ இன்று ஆழ்கடல் கடந்து
அன்னிய நாட்டில் வாழ்வினை ஓட்ட..
எனது மனதில் மேலுமோர் ஆசை !
என் பிள்ளைகள் யாவும் இனிய தமிழைத்
தாய்மொழி தன்னைக் கற்றிட வேண்டும் !
எழுத வாசிக்க என்பது அல்ல,
கசடு நீங்கிக் கற்க வேண்டும் !
கம்பன், வள்ளுவன், பாரதி அவன் தாசன்
மற்றும் மேத்தா... கல்கி, வரதராசன்
ஜெயகாந்தன், ஜானகி ராமன்... யாவரையும்
கரைத்துக் குடிக்க வேண்டும் !
எங்கள் நாட்டின் தங்கத் தாத்தா, விபுலானந்தர்
இன்றைய நாளின் செங்கையாழியான்...
சோ. ப., காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை
படைப்பையெல்லாம் அலசிடவேண்டும்,
பருகிச் சுவைத்து மயங்கிட வேண்டும் !

இந்த நாட்டின் இயந்திர கதியில்
எந்தன் ஆசை பேராசை தானோ?
அந்த ஆசை நிராசையாகிப்
போனாலும் போகட்டும் !
ஆனால் ஒன்று ! எந்தன் பிள்ளைகள்
சொந்த நாட்டில் அவர்களின் அன்பிற்காய்
ஏங்கித் தவிக்கும் அப்பப்பா, அப்பம்மா,
அம்மம்மா, தாத்தாவுக்கு
தன் சொந்தக் கரங்களால், இன்பத் தமிழில்
அன்புள்ள....... என விளித்து
ஆசையாய் மடல்களை எல்லாம்
அன்பெலாங் கொட்டி
வரைந்திடத்தான் வேண்டும்.
இது என் ஆசை, கனவு மாத்திரந்தானோ?
இலட்சியமும் கூடத்தான் !

சகி - பிராங்போர்ட்

பிராங்பேர்ட் நகரில்.....

# JAYANTHI TOURS

குறைந்த செலவில் சொகுசுப் பயணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| COLOMBO | ab | 1280,- | SINGAPORE | ab | 1290,- |
| MADRAS | ab | 1398,- | TORONTO | ab | 890,- |
| CMB/SIN | ab | 1570,- | MAD/SIN | ab | 1690,- |
| LONDON | ab | 260,- | NEWYORK | ab | 780,- |

**YOU NAME IT! WE GET IT!**

# INSURANCE

சகல விதமான இன்ஸ்யூரன்ஸ்களும்
தரமான முறையில் செய்து கொடுக்கப்படும்

## IMMOBILIEN VERMITTLUNG FINANZIERUNG

வீடு தேடுவதிலிருந்து வாங்குவது வரையிலான
சகல ஆலோசனைகளும் கடனுதவிலும் வழங்கப்படும்


## DOOR TO DOOR SERVICE

உங்களது தேவையே எங்களது சேவை

தேவைகட்கு தொடர்புகொள்க

**TEL: 069/5964661 - FAX: 069/599008**
**POSTFACH 1604077, 6000 FRANKFURT 1.**

# இது நிஜமாகும்



ஈழநாட்டுப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்த குமரனுக்கு அன்றைய செய்தி மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"அமைத்து விட்டோம் தமிழ் ஈழம் என்ற தலையங்கத்தின் கீழ், எமக்குக் கிடைத்த தமிழ் ஈழத்தை எம் கண்ணைப்போலப் பாதுகாக்க வேண்டும். சாதி, மத பேதங்கள் இன்றி, பழைய பகைமைகளை மறந்து தமிழன் தமிழனாகத் தலைநிமிர்ந்து வாழ்ந்திடுவோம். எம் தாய்த் திருநாட்டை மீட்பதற்குத் தன்னுயிரையே தியாகம் செய்த தியாகிகளைப் போற்றி, அவர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் புரிந்திடுவோம்.

உலகநாடெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்களே தயங்காமல் உங்கள் தாய்த் திருநாடாம், தமிழ் ஈழத்திற்கு வாருங்கள். எமது இலட்சியம் நிறைவேறி விட்டது. எமது நாட்டைச் செல்வம் கொளிக்கும் நாடாக மாற்றி டுவோம். தற்பொழுது உலகநாடுகள் எம் நாட்டை அங்கீகரித்து, எமக்கு உதவவும் முன்வந்துள்ளனர். ஒரு வருடகாலத்திற்குள் ஈழம் திரும்புபவர்க ளுக்கு, அவர்களுக்குரிய பிரயாணச் சீட்டுக்கள் அரைக்கட்டணமாகவும், அவர்களின் உடைமைகளை இலவசமாகக் கொண்டு செல்லவும் அனுமதித் துள்ளனர். தமிழ் மக்களே! உங்களுக்குத் தெரிந்த தொழில் நுட்பக் கருவிகள் எந்தத் தீர்வையும் இல்லாமல் தமிழீழத்தில் வந்திறங்கக் கூடியமுறையில் ஒழுங்குகள் செய்துள்ளோம்.

இது தமிழனுக்காக மீட்டெடுக்கப் பட்டநாடு. இங்கு எவ்வித தயக்கமும் இன்றி ஒவ்வொரு தமிழனும் தலை நிமிர்ந்து வாழவேண்டும். இங்கு உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதம் இல்லை. வெளி நாடுகளில் பிறந்து வளர்ந்த எமது இளம் சிறார்களே! நீங்கள் தயங்காமல் தமிழ் ஈழத் திற்கு வாருங்கள். எமது தாய் மொழியான தமிழை முதல் மொழியாகவும், இரண்டாம் மொழியாக நீங்கள் விரும்பிய மொழியையும் பயிலலாம். வருடா வருடம் திறமைமிக்க மாணவர்களை மேற்படிப்புக்காக, அவர்கள் விரும்பும் நாடுகளுக்கு அனுப்பும் திட்டம் ஒன்றும் அமுல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வெளிநாட்டவர்கள் இங்கு தொழிற் சாலைகளை நிறுவுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சகல நாட்டுத் தூதரகங்களும் இங்கு அமைக்கப்படவுள் ளது. மீட்கப்பட்ட மண்ணையும், மக்களையும் உற்சாகப் படுத்தி, நாட்டை முன்னேற்றுவதற்கு முதுகெலும்பாக இருப்பவர்கள் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தான். எவ்வித அச்சமும் இன்றி எல்லோரையும் வருக வருக என்று வரவேற்கின்றோம். இச் செய்தியைப் பிரசுரிப்பதில் ஈழநாடு பெருமை அடைகின்றது. ”

பத்திரிகையை வாசித்த குமரனுக்குப் பெரிய ஆச்சரியமும், மகிழ்சி யுமாக இருந்தது. ஆகா இது என்ன புதுமை. அப்படியானால் உலகிலேயே சகல மொழிகளும் தெரிந்தவர்கள் தமிழ்ஈழ மக்களாகத்தான் இருப்பார்கள், வெளிநாட்டில் இருக்கும் தமிழர்கள் எல்லோரும் தங்கள் பணத்தை இங்கு முதலீடு செய்வார்கள். எல்லோருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். உலகத்தில் பல்வேறு இடங்களிலும் இருந்து உல்லாசப்பயணிகள் வருவார்கள் என்னிடத்தில் இருக்கும் பணத்தில் கீரிமலைப் பகுதியில் உல்லாசப் பயணி களுக்கு ஏற்ற ஒரு பெரிய விடுதியைக் (Hotel) கட்ட வேண்டும். எமது கலை கலாச்சாரத்துக்கு மாறாகச் சில வெளிநாட்டவர் அரைகுறை ஆடைகளுடன் வருவார்கள். அப்படி யாரும் வந்தார்களேயானால் ஒரே உதையில் ஆட்க ளைக் கலைத்து விடுவேன் என்று, அருகில் ஆடம்பரத்துக்கு வைத்திருந்த மீன் தொட்டியை உதைத்தார். கீழே விழுந்த சத்தத்தில் திடுக்கிட்டு எழுந்த போதுதான் புரிந்தது அது கனவு என்று. பெருமூச்செறிந்தவாறு அட கடவுளே ! இது எப்போ நனவாகப் போகிறது ? நாம் வாழ்நாள் முழுவதும் வெளிநாடுக ளில் சுதந்திரமற்ற வாழ்வுதான் வாழவேண்டுமா? இந்த நிலை என்று தான் மாறுமோ? என்று மனம் நொந்துகொண்டார் குமரன்.

P. ராஜா.

## பெண்களுக்கு முதலிடம்

அண்மையில் பிராங்பேர்ட்டில் ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழர் இயக்கக் கிளையின் தலைவியாக திருமதி ஜெயந்தி நிர்மலனும், செயலாளராக திருமதி ரதி நித்தியானந்தனும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

# இந்து மன்றம் தனது பாதையிலே!

ஒரு வருடத்திற்கு முன் பிராங்போர்ட்டில் உருவாகிய இந்து மன்றம் செயற்படத் தொடங்கிவிட்டது. ஆம்! பொங்கல் விழாவைத் தை மாதத்தில் கொண்டாடிய இந்து மன்றத்தினர் மாசி மாதத்தில் சிவராத்திரியையும் பூசை புனஸ்காரத்து டன் கொண்டாடினார்கள். உண்மையான பக்தியுடனும் ஈடுபாட்டுடனும் பலரும் கலந்துகொண்டார்கள். கோவில் இல்லாத ஊர் பாழ் என்பதை மனதிற் கொண்டு செயற்படும் இந்து மன்றத்தினர் பாராட்டப்பட வேண்டியவர் களே!

# ப்பூ........ இவ்வளவுதானா?

கடந்த டிசம்பர் மாதம் தமிழ்மன்றம் தனது நான்காவது ஆண்டு

விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது தெரிந்ததே. தமிழ்மன்றத் தின் வெளியீடான தமிழ்நாதமும் கோலாகலமான இரண்டாவது ஆண் டுமலராக வெளிவந்தது. இதோ வண்ணத்துப் பூச்சியின் ஐந்தாவது ஆண்டுமலர் தயாராகிக் கொண்டிருக்கிறது. இவை சாதனைகளாகக் காணப்பட்டாலும் சாதனைகளே அல்ல ..........................
லண்டன் மாநகரில் St. Martins என்ற அரங்கில் தொடர்ந்து நாற்பது வருடங்களாக 16, 651 காட்சிகளை நடத்தி 41ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் எலிப்பொறி என்ற நாடகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால்.................!

மர்மக்கதை எழுத்தாளரான அகதா கிறிஸ்தி அம்மையாரின் எழுத்துவண் ணமான இந்த எலிப்பொறி நாடகத்தின் 40ஆவது ஆண்டு விழாவை எலிசபெத் மகாராணியாரின் ஆசிச்செய்தியுடன் தொடங்கி ஷம்பெய்ன் கலந்த மதிய உணவுடன் கொண்டாடினார்கள். இந்த நாடகத்தின் தயாரிப்பாளர் பீற்றர் சோண்டர்ஸ்ஸுக்கு வயது 81. எழுத்தாளர் அகதா அம்மையார் தனது 85ஆவது வயதில் 1976ம் ஆண்டில் காலமானார். நீண்டகாலமாக நடக்கும் நாடகங்களில் இரண்டாவது இடத்தை எடுத்துக் கொள்ளும் Fantastiks என்ற நாடகம் 13300 காட்சிகளை 33 வருடகால மாக நடத்திவிட்டிருக்கிறது. 75 நாட்கள் ஓடிவிட்டாலே வெள்ளிவிழாக் கொண்டாடுவதும் 100 நாட்கள் என்றால் பெரிய 'கட் அவுட்' களை நிறுவித் தூள் கிளப்பிக் கொண்டாடுவதும் என்ற வழக்கமுள்ள இந்திய சினிமாக்கள்........ ப்பூ.......இவ்வளவு தானா???

தொடர்புபட்ட இன்னும் ஒரு செய்தி ☞ 43 ஆம் பக்கம்.

# யூகோஸ்லாவியாவில் என்ன நடக்கிறது?

இந்தக் கேள்வி பலர் மனதில் அடிக்கடி தோன்றி மறையலாம். பல வாசகர்கள் இதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினால் என்ன என்று கேட்டும் விட்டார்கள். இதோ, யூகோஸ்லாவியாவின் சரித்திரம், தற்போதைய யுத்தத்திற் பங்கு பெறும் இனங்கள் என்பன போன்ற அடிப்படை விடயங்களை அறிமுகமாக முன் வைக்கிறோம்.

ஆ---ர்.

## யூகோஸ்லாவியா

ஸ்லோவேனியா, குரோஷியா, சேர்பியா, பொஸ்னியா-ஹேர்ஸேகொவின்னா, மொன்ரிநீக்ரோ, மசெடோனியா என்ற குடியரசுகளையும் வொஜ்வோணா, கொசோவா என்ற மாகாணங்களையும் கொண்ட ஒரு கூட்டாட்சி (சமஷ்டி) ஆகத்தான் யூகோஸ்லாவியா இது நாள் வரை இருந்து வந்தது.

சரித்திரம்: குரோஷியா உட்பட இன்றைய யூகோஸ்லாவியாவின் ஒரு பெரும் பகுதி ஹப்ஸ்பேர்க்ஸ் (Hapsburgs) என்ற இனத்தினரால் ஆளப்பட்ட அவுஸ்திரிய-ஹங்கேரிய சாம்ராச்சியத்தின் (Austro-Hungarian Empire) ஒரு பகுதியாகவே முன்னர் இருந்துவந்தது. மிகுதிப்பகுதிகளான சேர்பியா பெரிய சேர்பியா (Greater Serbia) என்ற பெயரிலும், மொன்ரிநீக்ரோ சேர்பியாவுக்குச் சார்பான தனி நாடாகவும் இருந்துவந்தன. 15ம், 16ம் நூற்றாண்டுகளில் ஒட்டொமான் சாம்ராச்சியம் அவுஸ்திரிய-ஹங்கேரிய சாம்ராச்சியத்தைச் சிதைத்தது. பின்னர் ஒட்டொமான் இராச்சியம் ஆட்டம் காணத் தொடங்கிய போது , அதன் எல்லைகட்குட்பட்ட பல இனங்களும் நாடுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. 1878ம் ஆண்டில் பேர்ளின் கொங்கிரஸின் (Berlin Congress) மூலம் மேற்படி நாடுகள் இனவாரியான நாடுகள் ஆகின. முதலாவது உலக யுத்தத்தின் முடிவில், வேர்செயில்ஸ் ஒப்பந்தப்படி (Treaty of Versailles) வொஜ்வோணா மாநிலம் சேர்பியாவுடன் இணைக்கப்பட்டது. மொன்ரிநீக்ரோ எப்போதுமே சேர்பியாவுக்குச் சார்பாகவே இயங்கிவந்தது. வேர்செயில்ஸ் ஒப்பந்தம் பொஸ்னியா, குரோஷியா, மசெடோனியா, ஸ்லோவேனியா எல்லாவற்றையும் சேர்பியாவுடன் இணைத்து இது வரை எங்களுக்குத் தெரிந்த யூகோஸ்லாவியாவை உருவாக்கிவைத்தது. ➡

மனைவி: நேற்று பச்சை நிறத்தில் ஒரு கைக்குட்டை வாங்கினேன்
அதற்கு "மட்சா" ஒரு சாறி வாங்கித் தாங்கோ!

கணவன்: !!!

- சுகந்தன் -

# இனங்கள்:

## சேர்பியர்

கி.பி. 6ம், 7ம் நூற்றாண்டுகளில் கார்பதியான் (Carpathian) மலைத்தொடருக்கு அப்பாலிருந்து வந்து குடியேறியவர் சேர்பியர். இவர்கள் ஸ்லாவிக் இனத்தின் ஒரு பிரிவினரே! 9ம் நூற்றாண்டில் இவர்கள் கிறித்தவ மதத்தை ஏற்றுக் கொண்டு சேர்பிய ஓதோடொக்ஸ் கிறித்தவ சபையை அமைத்துக் கொண்டார்கள். பாரம்பரிய ஸ்லாவிக் இனத்திற்கே பொதுவான கிரிலிக் (Cyrillic) எழுத்து வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு, இவர்களும் அயலவர்களான பல்கேரியர், குரோஷியர் போன்ற ஸ்லாவிக் இனங்களின் மொழிகளைப் போன்ற மொழியையே பேசுகின்றார்கள்.

தெற்கே ஏஜியன் கடலிலிருந்து (Aegean Sea) வடக்கே டன்யூப் ஆறு வரையிலும் (River Danube) கிழக்கே சின்ன ஆசியா (Asia Minor) என்றழைக்கப்படும் பகுதிகளையும் உள்ளடக்கியதான ஒரு சாம்ராச்சியத்தை 14ம் நூற்றாண்டில் சேர்பியர்கள் நிறுவினார்கள். இந்தச் சாம்ராச்சியம் 1389ம் ஆண்டு கொசோவா மாநிலத்தில் நடந்த யுத்தத்தில் ஒட்டொமான் சாம்ராச்சியத்தினால் நிர்மூலமாக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதி வரையான 500 வருட கால அன்னிய ஆட்சிக்குச் சேர்பியர்கள் உட்படுத்தப் பட்டனர். இவர்களை அடிமையாக்கிய கொசோவா மாநில யுத்தம் நினைவாக ஜூன் 28ம் திகதி இன்றும் சேர்பியருக்கான ஒரு முக்கிய விடுமுறை நாளாகும். ஒரு நீண்டகால நிரந்தர யுத்தத்தின் மூலமே சேர்பியர் தம் அடிமைத் தளைகளை அறுத்தெறியக் கூடியதாக இருந்தது. இரண்டு உலக மகா யுத்தங்களிலும் நேசநாடுகளுடன் இணைந்து நின்று மிகவும் பாரிய இழப்புகளைச் சந்தித்தவர்கள் இந்தச் சேர்பியர். 2 ஆவது உலக யுத்தத்தின் போது நாசிகளுக்குச் சார்பாகக் குரோஷியாவிலிருந்த சர்வாதிகார ஆட்சியின் கீழ் பல்லாயிரக்கணக்கான சேர்பியர்கள் அழிக்கப்பட்டதை இன்றைய சேர்பியர்கள் மறக்கவில்லை. யூகோஸ்லாவியா என்ற கூட்டமைப்பு சிதையுமானால் சேர்பியாவுக்கு வெளியே வாழும் சேர்பியர்கள், இரண்டாந்தரப் பிரசைகளாகி விடுவார்களே என்ற பயம் இவர்களுக்கு. அதனால் யூகோஸ்லாவியா என்ற கூட்டமைப்பு சிதைவதை இவர்கள் விரும்பவில்லை. மேற்படி கூட்டமைப்பின் 25 மில்லியன் மக்கள் தொகையில் 8.5 மில்லியன் பேர் சேர்பியர் ஆவர். அனைத்து சேர்பியரையும் பாதுகாக்க வேண்டும் என்ற இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகத் தீவிரம் மிகுந்த சேர்பியத் தேசியவாதிகள் எல்லாச் சேர்பியரும் இணைந்து வாழும் ஒரு பரந்த சேர்பியாவை உருவாக்க விரும்புகிறார்

கள். இவர்களின் Orthodox Christian Church மதம் இவர்களின் சமுதாயத் தூணாக இருந்துவந்திருக்கிறது. 500 வருடத் துருக்கியர் ஆட்சியின் கீழ்க்கூட இவர்களுடைய கலாச்சாரம் பாதுகாக்கப்பட்டது என்றால் அதற்கு இவர்களின் மதப் பற்றே காரணம்.

## குரோஷியர்

ஸ்லாவிக் இனத்தின் இன்னொரு பிரிவான குரோஷியரும் சேர்பியரைப் போலவே கார்பதியான் மலைத்தொடர்கட்கப்பாலிருந்து வந்தவர்களே. கிட்டத்தட்ட ஒரே கால கட்டத்திற்றான் இவர்களும் குடிபெயர்ந்தனர். மொழிகளும் ஓரடிப்படையிலானவையே! றோமன் கத்தோலிக்க மதப் பிரிவை ஏற்றுக் கொண்டுள்ள இவர்கள், லத்தீன் எழுத்து வடிவங்க ளைப் பாவிக்கின்றனர். அவுஸ்திரிய-ஹங்கேரிய சாம்ராச்சியத்தின் நீண்ட கால ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் மத்திய ஐரோப்பிய கலாச்சாரத்தை யும் இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

1102ம் ஆண்டில் ஹங்கேரிய அரசினால் அடிமைப்படுத்தப் படும்வரை குரோஷியருக்கும் தமக்கென்ற ஒரு ஆட்சி இருக்கத்தான் செய்தது. பல நூற்றாண்டுகளுக்கு (ஒட்டொமான்) துருக்கியர் ஆட்சியின் கீழ் சேர்பியர் இருந்ததைப் போலவே குரோஷியரும் முதலாவது உலக யுத்தம் முடியும் வரை அவுஸ்திரிய-ஹங்கேரிய ஆட்சியின் கீழேயே இருந்தனர். பின்னர் ஒட்டொமான், அவுஸ்திரிய-ஹங்கேரிய சாம்ராச்சியங்களின் சாம்பலின் மேல் சேர்பியர், குரோஷியர், ஸ்லோவேனியர் அனைவரையம் உள்ளடக் கிய சேர்பிய இராசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.

வேறு நாட்டினரால் ஆளப்படுவதை விட ஸ்லோவேனியர், சேர்பியருடன் இணைந்து வாழ்வது சிறந்ததே என்று கருதியவர்கள் தான் இந்தக் குரோஷியர். ஆனால் விரைவிலேயே சேர்பியர் தங்களை ஆளுமை செய்கிறார்கள் என்ற முறையீட்டை முன்வைக்கத் தொடங்கி விட்டார்கள் . 1928ம் ஆண்டுஇவர்களின் தலைவரான Stjepan Radic கொல்லப்பட்டு, முடிக்குரிய சர்வாதிகார ஆட்சி ஒன்று நிறுவப்பட்டது. நாட்டின் பெயரும் 'சேர்பியர், குரோஷியர், ஸ்லோவேனியரின் இராசாங்கம்' (Kingdom of Serbs, Croats and Slovenes) என்பதிலிருந்து யூகோஸ்லாவிய இராசாங்கம் (Kingdom of Yugoslavia) என்று மாற்றப்பட்டது.

சேர்பியருக்கெதிரான குரோஷியரின் வெறுப்பு வளர்ந்து கொண்டே இருந்தது. 2ஆவது உலக யுத்தத்தின் போது தீவிர குரோஷியத் தேசி யவாதிகள் ஹிட்லரின் நாசிகளுடன் இணைந்து பெல்கிரேட் வரையிலான ஒரு அரசாங்கத்தை அமைத்தனர். இலட்சக் கணக்கான சேர்பியர், யூதர், -

ஜிப்ஸிகள் என்போர் இந்த அரசாங்கத்தினால் நாசிகளின் செறிவு நிலையங்களுக்கு (concentration camps) அனுப்பப்பட்டு அங்கே அழிக்கப் பட்டனர். யூகோஸ்லாவியா என்ற கூட்டமைப்பின் 25 மில்லியன் சனத்தொகையில் 4.5 மில்லியனேயான குரோஷியர் சேர்பியரின் ஆளுமையை எதிர்த்து உறுதியாக நிற்க இவர்களின் தேசிய உணர்வுடன் மத உணர்வு ம் பின்னிப்பிணைந்து இருந்தமை மிகவும் உறுதுணையாக இருந்தது. தமக்கென்று ஒரு ஆட்சி அமைப்பதில் இவர்களுடைய மதபீடம் முன்னணி வகிக்கிறது.

## முஸ்லீம்கள்

இவர்களும் ஸ்லாவிய இனத்தவரே. பெரும்பான்மையானோர் பொஸ்னி யாவிலும் , இன்னும் பலர் சேர்பியாவுக்கும் மொன்ரிநீக்ரோவுக்கும் இடையே பிரிபட்டுப் போன முன்னைய ஒட்டோமன் பிரதேசமான நோவி பசார் (Novi Pazzar) என்ற இடத்திலும் வசிக்கிறார்கள். ஒட் டொமான் ஆட்சியின் கீழ் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்ட ஸ்லாவிய இனத்தவரின் பரம்பரையே இன்றைய முஸ்லீம்கள். துருக்கி மொழியிலான பல சொற்களையும், சொற்றொடர்களையும் சேர்த்துக் கொண்டு சேர்பிய-குரோஷிய மொழிப் பிரிவொன்றை இவர்கள் பேசி வருகிறார்கள். சேர்பிய, குரோஷியத் தேசியவாதிகள் இரண்டு பகுதியி னருமே ........ இவர்களை இஸ்லாமிய சமயத்தைத் தழுவிக் கொண்ட தங்கள் இனத்தவர் என்று கோருகிறார்கள். ஆனால் வேறு சரித்திர வரலாறுகள் இவர்களை பொகோமில்ஸ் (Bogomils) என்ற இனத்தவரின் பரம்பரையினர் எனக் கூறுகின்றன. மேற்கத்தைய, கிழக்கத்தைய கிறித்தவ மதப் பிரிவுகளின் பாதிப்புகளிலிருந்து தப்புவதற்காகவும் தங்களைத் தாக்கி வரும் துருக்கியரைச் சமாதானம் செய்து கொள்வதற்காகவும் பொகோமில்ஸ் இனத்தவர் இஸ்லாமிய மதத்தைத் தழுவிக் கொண்டனர் . துருக்கியர் பரம்பரையிலேயே வழிவந்த பல முஸ்லீம்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

17ம் நூற்றாண்டில் பொஸ்னிய நகரமான சறெயேவோ(Sarajevo) ஐரோப் பிய நகரங்களுக்குள் முக்கியமானவொன்றாக விளங்கி, இரண்டாம் டமாஸ்கஸ் (Damascus) என்று பெயர் பெற்றிருந்தது. ஒட்டொமான் இராச்சியம் சிதைந்த போது சேர்பியா பொஸ்னியாவை ஏற்க முனைந் தது. ஆனால் 1878ம் ஆண்டிலான பேர்ளின் கொங்கிரஸில் பொஸ் னியா ஹப்ஸ்பேர்க் இராச்சியத்துக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட் டது. ஆனால் மிகவும் கடூரமான யுத்தத்தின் பின்னரே ஹப்ஸ்பேர்க் படைகள் பொஸ்னியாவுக்குள் நுழைய முடிந்தது. பின்னர் ஹப்ஸ்பேர்க் அரச அதிகாரிகள் பொஸ்னியத் தேசிய உணர்வை வளர்க்க முயன்ற

போதெல்லாம் முஸ்லீம்கள் ஆதரித்தாலும் சேர்பியரும் குரோஷியரும் எதிர்த்தே வந்தனர். 2ஆவது உலக யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் சேர்பியராற் கொன்று குவிக்கப்பட்டனர். இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னரும் கொம்யூனிஸ்ட் யூகொஸ்லாவியாவின் ஸ்தாபகரான மார்ஷல் டிட்டோ கூட பொஸ்னியத் தேசிய உணர்வைக் கட்டுப்படுத்தியே வைத்திருந்தார். குளிர்ந்த யுத்தம் என்று அழைக்கப்பட்ட காலங்களில் இது மிகவும் சுலபமாக இருந்தாலும் 1960ம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் யூகோஸ்லாவியாவில் கொம்யூனிஸம் சிறிதளவு தளர்நத போது முஸ்லீம்களுக்கும் தேசிய அந்தஸ்து வழங்கப்பட்டது.

பொஸ்னியாவில் இஸ்லாம்மிய மதம் 500 வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகிறது. யூகோஸ்லாவிய முஸ்லீம்கள் நிதானத்திற்கும் பொறுமைக்கும் பெயர் போனவர்கள் . இவர்களின் மொத்தத் தொகை 2. 5 மில்லியன்களே!

தற்போதைய யுத்தத்தில் முன்னணியில் நிற்கும் மூன்று இனங்களையே மேலே சந்தித்தீர்கள். இவர்களை விட ஸ்லோவேனியர், மொன்ரிநீக்றியர் , மசெடோனியர், அல்பேனியர் என்ற இனத்தவர்கள் பெரும்பான்மை யாகவும் பல்கேரியர்கள், ஸ்லோவேக்கியர்கள், ஹங்கேரியர்கள் ஆகி யோரும் யூகோஸ்லாவியாவில் வசிக்கிறார்கள்.

ஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜ

## அடுத்த இதழில் யூகோஸ்லாவிய யுத்தம்!

ஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜஜ

## உங்கள் கவனத்திற்கு!

வருகிற ஜூலை முதலாம் திகதியிலிருந்து முழு ஜேர்மனியிலுமாக மொத்தம் 26, 700 புதிய அஞ்சல் இலக்கங்கள் (Postleitzahl) நடைமுறைக் குக் கொண்டுவரப்படும். ஐந்து தானங்களையுடைய இந்தப் புதிய இலக்கங் கள் இங்குள்ள தபால் விநியோக முறையை இலகுபடுத்தும் என்று நம்பப்படுகிறது. மொத்தமாக 208 நகரங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட அஞ்சலிலக்கங்களைப் பெறும். மேற்படி புதிய இலக்கங்கள் ஜனவரி 15ம் திகதி வெளிவிடப்பட்டு ஜூலை 1ம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட இருப்பதால் -------பல தனியார் + அரச நிறுவனங்களின் பல விதமான பத்திரங்களைப் புதிதாக அச்சடிக்க மட்டும் மில்லியன் கணக் கில் செலவாகுமாம்!!!!

*********************************

மகாராணி **மகாராணி** மகாராணி

# MAHARANI GEWÜRZHAUS

**மகாராணிக்கு நிகர் மகாராணியே!**

## இதோ உங்கள் தேவைகளுக்காக புதிய நிர்வாகத்தின் கீழ்

- சகல இந்திய, இலங்கை உணவு வகைகள்
- மரக்கறி, கடலுணவுப் பொருட்கள்
- தரமான 22 கரட் தங்க நகைகள்
- சிங்கப்பூரில் தயாரான ஆடைகள்
- ஆங்கில, தமிழ் மாத வார சஞ்சிகைகள்
- **AUDIO, VIDEO CASSETTES**

**போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள..... இன்றே நாடுங்கள்!**

**MAHARANI GEWÜRZHAUS**
**DÜSSELDORFER STR. 13**
**6000 FRANKFURT 1**
**TEL: 069/234776**



ஆசிரியை: உன்னிடம் 10 டி.எம். உன் அம்மாவிடம் 10 டி.ம்.
இருக்கிறது. இரண்டையும் சேர்த்தால் எவ்வளவு வரும்
மாணவன்: ஒன்றும் வராது ரீச்சர்.
ஆசிரியை: உனக்கு கணக்குப் போடத் தெரியவில்லை.
மாணவன்: உங்களுக்கு என் அம்மாவைப் பற்றித் தெரியவில்லை.

- அரவிந்தன் -

ஒரு விபத்தின் பின்.......
கணவன்: நான் எங்கே சொர்க்கத்திலா இருக்கிறேன்?
மனைவி: நிச்சயமாக இருக்காது. ஏனென்றால் பக்கத்தில் நான் இருக்கிறேனே!

- ஸ்ரீ -

# கேள்வி- பதில்

குமாரசாமி, ஹொஹ்ஹைஹம்.

"வெட்கப்படுங்கள் வேதனைப்படுங்கள்"இல் புலிகளைத் தாக்கியது போலவும், "மாவீரர் நாள்"இல் வாழ்த்துவது போலவும் தெரிகிறது. தமிழ் நாதத்தின் நிலைப்பாடு என்ன? பத்திரிகைக் குழுவினரின் நிலைப்பாடு என்ன?

த.நா.:

பத்திரிகைக் குழுவில் இருப்பவர்களின் நிலைப்பாடு அவரவரைப் பொறுத்ததே! தமிழ்நாதத்தைப் பொறுத்த வரையில் அகதிகளாக அலையும் தமிழர் வாழ்வில் நிம்மதி வேண்டும். இதைவிட ஆக்கங்களைப் பொறுத்த வரையில், தமிழரோடு தொடர்புபட்ட நிகழ்வுகளை விவரணம் செய்யும் போதும் விமர்சிக்கும் போதும் சிலவேளைகளிற் சிலரைச் சாடுவது போலவும் சிலவேளைகளிற் சிலரைப் பாடுவது போலவும் தோன்றலாம். அந்த ஆக்கங்கள் மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட விமர்சனங்களே என்ற சரியான கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது -வாழ்த்துவதும் தாக்குவதும் போன்ற தோற்றம் -தமிழ்நாதம் தமிழர்க்காக அவர்களின் நல்வாழ்வுக்காக (தன்னை அர்ப்பணித்துள்ளது) என்ற உண்மை புரியும்.

ஜெரால்ட், றாட்டிங்கன்:
மற்றவர்களைப் பற்றிக் கதைகள் கூறித்திரிபவருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?
த. நா: ஒருவரைப் பற்றி ஒருவர் கதைப்பதை உடன் நிறுத்திவிட்டு இப்போதிருந்து ஒருவரோடொருவர் கதையுங்கள் என்பதுதான்!

கிருபா, கொழும்பு:
1. 15,000 க்கும் அதிகமான தமிழர்கள் ஜேர்மனியில் வாழ்கிறார்களாமே, அப்படியானால் தமிழ்நாதம் போன்ற தரமான சஞ்சிகை குறைந்தது 5000 மாவது விற்பனையாகும் அல்லவா?
த. நா: சொன்னாலும் வெட்கமடா..... சொல்லாவிட்டால் துக்கமடா....!
2. பத்திரிகை ஒன்றை வெளிநாட்டில் நடத்துவதில் உள்ள சிக்கல்கள் என்ன?
த. நா: இடியப்பச்சிக்கல் தெரியுமா உங்களு க்கு? அதில் தொடக்கம் தேடிப்பிடிப்பது எப்படிச் சிக்கலோ அதைவிடச்சிக்கல் சஞ்சிகைக்கு சந்தா தேடிப்பிடிப்பது.
3. உங்கள் பத்திரிகைத்துறை அனுபவத்திலேயே நீங்கள் வெறுப்பது என்று ஒன்று உண்டா?
த. நா: ஒன்று உண்டாவா? உதாரணத்திற்கு இரண்டு.....விளம்பரம் தேடி அலைவதும்.... சஞ்சிகையை வாங்கும் படிகேட்டுத் தலைசொறிந்து கொண்டு நிற்பதுவும்.

கந்தசாமி, மரியண்போண்:
செக்ஸியாகக் கதையெழுதிய ( சாப்பாட்டுக்கு முதல் ஒருக்கா....) தமிழச்சி உண்மையிலேயே ஒரு பெண்ணு?
த. நா: ஒரு பெண்ணால் தான் இன்னொரு பெண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும் என்கிறார்கள்.

முருகானந்தன், சூரிச்:
உங்களுக்கு பிடித்த எழுத்தாளர்கள் மூன்று பேரைக்கூறுங்கள்?
த. நா: 1. கெஞ்சி அலையவைக்காமல் தாங்களாகவே ஆக்கங்களை அனுப்பிவைப்பவர்.
2. தரும் ஆக்கங்களை சுணங்காமல் அனுப்பிவைப்பவர்கள்.
3. தொடர்ந்தும் தொடர்ந்தும் ஆக்கங்களை அனுப்பிக் கொண்டே இருப்பவர்கள்.
ஆகிய மூன்று எழுத்தாளர்களும் தமிழ்நாதத்திற்கு மிகவும் விரும்பிய எழுத்தாளர்களாகும்.

## மன்னன் நினைத்தால் என்னவும் செய்யலாம்

**1534**ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மன்னராக இருந்த எட்டாம் ஹென்றி தனது மனைவியை விவாகரத்துச் செய்து கொள்ள விரும்பினார். அன்றைய காலத்தில் இங்கிலாந்தின் முடியாட்சி கத்தோலிக்க சமயத்தைத் தழுவி இருந்தபடியினால் இந்த விவாகரத்துக்குக் கத்தோலிக்க சமய அதியுயர் குருவான புனித பாப்பாண்டவரின் சம்மதம் தேவைப்பட்டது. அப்போதைய புனித பாப்பாண்டவரான ஏழாவது கிளெமென்ஸ் அவர்கள் இந்த விவாகரத்துக்குச் சம்மதம் அளிக்க மறுத்தார். கோபங் கொண்ட எட்டாம் ஹென்றி Church of England என்ற பெயரில் ஒரு புதிய மதபீடத்தை அமைத்துக் கொண்டான்.

## இரசித்துச் சிரித்தவற்றைத் தொகுத்துத் தருகிறார்.

கனகசபை-இரவீந்திரன், கனடா.

* அவள்: இந்தப் புது உடுப்பிலை உன்ரை மனிசன் இண்டைக்கு நல்ல வடிவாய் இருக்கிறார்.

இவள்: உடுப்புப் புதுசில்லை; இந்த மனிசன் தான் புதுசு!!!!!!

* சிறுவன்: பிள்ளையளை விட அப்பாமாருக்குத் தான் கூடத் தெரியுமோ?

தந்தை: நிச்சயமாக!

சிறுவன்: ஆரப்பா நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தது ?

தந்தை: **James Watt.**

சிறுவன்: அப்ப ஏனப்பா ஜேம்சின் அப்பா நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடிக்கேல்லை???????

* சாத்திரி: மிக விரைவில் நீங்கள் ஒரு அழகான பெண்ணை மணக்கப் போகிறீர்கள்.

கேட்பவர்: வெரி குட்! ஆனா இப்ப எனக்கு மனைவியாய் இருக்கிற அரக்கியை என்ன செய்ய?????

* தந்தை : பணத்தை விட உலகில் வேறு பல விஷயங்கள் உண்டு மகனே!

மகன் : உண்மை அப்பா! ஆனாலும் பணம் இல்லாமல் அவற்றை அடைய முடியாதே!!!!!

# செலவைக் குறைக்க சில வழிகள்.......

ஜேர்மனியின் எரிபொருட் (சக்தி) பாவனையில் மூன்றில் ஒரு பங்கு வீடுகளையும் மற்றும் இடங்களையும் சூடாக வைத்திருப்பதற்காகவே செலவு செய்யப்படுகிறது. குளிர் காலத்தில் ஜேர்மனியிலுள்ளவர்கள் விறைத்துப்போய் விடாமல் இருக்க மட்டும் 170 தொன் எரிபொருள் பாவிக்கப்படுகிறது. உங்கள் எரிபொருட் செலவைக் குறைக்க இதோ சில வழிகள்:

* பகல் வேளைகளில் உங்கள் வீடுகளில் வெப்பநிலையை +20 cக்கு மேற்படாது வைத்திருங்கள். (இந்த வெப்பநிலை குழந்தைகட்கும் சிறுவர் கட்கும் மிகவும் ஆரோக்கியமானதுங்கூட.)
* படுக்கையறையின் வெப்பநிலை +16க்கும் அதிகமாகிவிடாமல் வைத்தி ருங்கள். தலையிடி, தொண்டைநோ, தடிமன் என்ற தொல்லைகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் நீங்கள் நித்திரை கொள்ளும் போதே பணச் செலவையும் தவிர்த்துக் கொள்ளலாம்.
* இரவு வேளைகளில் +15 ஆகக் குறைத்துவையுங்கள்.
* ஜன்னல்க் கண்ணாடிகளுக்கு மூடியாக இருக்கும் றோலாடன்களை இருட்டும் போதே மூடிவிடுங்கள்.
* நிரந்தரமாக ஜன்னல்களைச் சரித்துத் திறந்து வைப்பதைத் தவிர்த்து மணித்தியாலத்துக்கு ஒரு தடவை நல்ல காற்றோட்டம் வரும் விதத்தில் ஜன்னல்களைத் திறந்து மூடுங்கள்.
* வெப்பந் தரும் சூடேற்றிகளை (Heizung, Heizkoerper) ஜன்னல்த்திரை போன்ற தடைகள் மறைக்காமல் வழி செய்யுங்கள்.
* ஜன்னல்கள், கதவுகள் என்பனவற்றில் இருக்கும் Dichtung களைப் புதுப்பியுங்கள்.
* குளியல்த்தொட்டிகளை நிரப்பி இறங்கிக் குளிப்பதை விட ஷவரில்க் குளிப்பது தண்ணீரையும் எரிபொருளையும் மிச்சம் பிடிக்க வழி செய்யும். இது களைத்திருக்கும் நரம்பு நாளங்களுக்கும் நல்லதென்பது வைத்தியர் களினது கருத்து.
* சுடுநீரின் வெப்பநிலை 40க்கும் 45க்கும் இடைப்பட்டதாக வைத்துக் கொள்ளுங்கள்.
* தடித்த ஆடைகளையும் புல் ஓவர்களையும் அணிவதுடன் நல்ல காலுறைகளையும் அணியுங்கள்.

600 மார்க்காகக் கொடுக்கப்பட்டு வரும் பிள்ளை வளர்ப்புப் பணத்தை (Erziehungsgeld) 550 மார்க்காகக் குறைக்க ஜேர்மன் பொருளாதார அமைச்சர் தியோ வைகல் திட்டமிட்டு வருகிறார். இப்படிச் செய்வதனால் வருடம் ஒன்றுக்கு 1.3 மில்லியார்டன் மார்க்குகளை அரசு மிச்சம் பிடிக்குமாம்.

# மாப்பிள்ளை தேடுகிறீர்களா?

அல்லது

# பெண் தேடும் படலமா?

**உங்கள் விருப்பம் விரைவில் நிறைவுபெற உடனே தொடர்பு கொள்ளுங்கள்!**

**Mr. S.Nithiyananthan,**
**Lahn str. 27,**
**6000 Frankfurt 1.**
**Tel: 069/737879**



# YJ

# வீடியோ மூவிஸ்

**உங்கள் திருமண வைபவங்களா?**
**உங்கள் சிறார்களின் பிறந்தநாள் விழாக்களா?**
**பூப்புனித நீராட்டு விழாக்களா?**

*விழாக்களையும் மற்றும் சகல விதமான கொண்டாட்டங்களையும் வீடியோவில் நவீன முறையில் படம் பிடித்துத்தர நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.......*

# "YJ வீடியோ மூவிஸ்"

<u>தொலைபேசி இலக்கங்கள்</u>

**திரவியம் ~ 069/7392629 * ஜெயேந்திரா - 069/7384481**

***FRANKFURT***

# இதய தாகங்கள்

ரவிசங்கர் எழுதும்



## இறுதி அத்தியாயம்

"உங்களுக்கு ஒண்ணும் ஆகலை, ஆனா உங்க வயித்திலை ஒரு புது உயிர் உருவாகிக்கிட்டு இருக்கு."

அடக் கடவுளே! நான் நினைச்சது போல எல்லாம் உருவாகிடிச்சு. இப்ப என்ன செய்ய? வயித்திலை உள்ளதை வாழவைக்கிறதா இல்லை அழிக்கிறதா? அப்பா யார் என்று தெரியாத குழந்தை என்று ஊர் உலகம் பேசாதா? மனது மயங்கியது.

யார் என்ன சொன்னால் என்ன? வயிற்றில் வளர்வது என் குழந்தை.- வளர்வது இயற்கை. இறைவன் கொடுத்த குழந்தையை அழிக்க எவருக் கும் உரிமை இல்லை. எப்படியும் குழந்தையைப் பத்துமாதம் வரை வயிற்றில் சுமந்து, பாரிலே இறக்கிவைத்து, பெயர் சூட்டிப் பணிவிடை

செய்து, பெரியவனாக்கிப் பாரெங்கும் புகழ் சூடும் மனிதனாக்க வேண்டும் என்று அவள் மனச்சாட்சி அவளிடம் பேசியது.

"இப்ப எப்பிடிம்மா இருக்கு?"

"பரவாயில்லை, ஆனா ஒரே வாந்தியும் வயித்து வலியுமா இருக்கு டாக்டர்."

"வயித்திலை குழந்தை உருவாகினா வாந்தி வரத்தான் செய்யும். வாந்தி வந்தா வயித்திலை வலி இருக்கத்தான் செய்யும். இதைப் பாத்தா யாரால் முடியும்? எதுக்கும் வீட்டுக்குப்போய் ஒரு ஏழு மாதம் 14 நாள் ஓய்வெடுத்துக்குங்க."

"எதுக்கு டாக்டர்?"

"7 மாதம் 14 நாட்கள் முடிஞ்சுதெண்ணா உங்களுக்கு குழந்தை பிறந்திடும் அப்புறம் வலியோ, வாந்தியோ இருக்காது."

"டாக்டர் இன்னைக்கு எத்தனை மணிக்குக் கொழும்புக்கு ட்றெயின் இருக்கு?"

"சாயந்திரம் 6 மணிக்கு ஒரு ட்றெயின் இருக்கு, ஆமா எதுக்குக் கேக்கிறீங்க?"

"டாக்டர் நான் இன்னைக்கே கொழும்புக்கு போய் ஆகணும்."

"எதுக்கு அவசரப்படுகிறீங்க? 2 நாளைக்கு இங்க நல்லா ஓய்வெடுத்திட்டுப் போகலாமே."

"இல்லை டாக்டர், நான் இன்றைக்கே அவசரமாய்க் கொழும்புக்குப் போய் ஆகணும்"..... நித்தியாவின் குரல் தளுதளுக்கக் கண்களில் கண்ணீர் தளிர்த்தது.

"அப்பிடி என்ன அவசரமான வேலை மிஸிஸ். நித்தியா?"

"இன்றைக்கு என் கணவரோட ஈமக்கிரியைகள் நடக்குது. நான் கண்டிப்பாப் போய் அவரைப் பாக்கணும்."

"அப்பிடியா?" டாக்டரின் கண்களும் சோககீதம் பாடின. "அப்பிடீன்னா உடனே கிளம்புங்க, என் காரிலே கொண்டு வந்து உங்களை ட்றெயின் ஏத்தி அனுப்பி வைக்கிறன்"

வயிற்றிலே புதிய சுமை, மனத்திலோ கணவனாகிய சங்கரின் சுமை. வயிற்றுச் சுமையைப் பத்து மாதத்தில் இறக்கி வைத்து விடலாம். மனச்சுமையை எப்படி எங்கே இறக்கி வைப்பது? காலத்தின் கோலம் தான் என்ன? இந்தக் கோலத்தின் வாழ்வு தான் என்ன? விதி செய்த மாயமா? இல்லை மதி கெட்ட மாயமா? உலகமே ஒரு நாடக மேடை. இதில் வாழ்கின்ற மனிதரெல்லாம் ஒருவித நடிகரே! மனிதனுக்கு எத்தனை வேஷங்கள்? நாடகம் முடிந்ததும் ஒவ்வொரு மனிதனும் தன் உடல் என்ற வேஷத்தைச் சுடுகாட்டில் கழற்றி வைக்கிறான். அதற்குப் பின் அவன் மனிதன் அல்லவே; வெறும் சாம்பல் தானே! மனிதனுக்கு மட்டுமா இந்த விதி? இயற்கையில் உள்ள அனைத்துக்கும் தானே!துடுப்பு பாரம் என்று ஓடம் கரையைத் தேடுது; கடலே வேண்டாம் என்று

அலைகள் கரையைத்தேடுது; நினைவே வேண்டாம் என்று மனம் அமைதி தேடுது! இந்த அமைதி தான் இறப்பா? இறப்பென்ற ஒன்று இல்லாவிட்டால் என் சங்கர் என்னிடம் இருந்திருப்பான். புதுப் பிறப்பொன்று என் வயிற்றில் இல்லை என்றால் நான் உன்னோடு இருந்திருப்பேனே, உன் உயிரை என் வயிற்றில் சுமக்கவைத்து விட்டு, உடல் விட்டு, எனை விட்டு, ஏன் சென்றாய் சங்கர்? நினைவுகளின் நித்திரையில் நித்தியா தன்னை மறந்திருந்து பயணித்தாள் கொழும்பை நோக்கி.

"காப்பி, டீ.... காப்பி, டீ ..." என்று ஒருவன் யன்னல் ஓரம் கத்துவது கேட்டுக் கண் விழித்தாள் நித்தியா.
"ஆமா ட்றெயின் இப்ப எங்க நிக்குது?" பதட்டத்துடன் காப்பி விற்பவனிடம் விசாரித்தாள்.
"அம்மா, ட்றெயின் நிக்கலை, ஓடுது. இராத்திரி 12 மணிக்குக் கோட்டை றெயில்வே ஸ்டேஷனுக்கு வந்த ட்றெயின் இப்ப காலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் போகுது. நல்ல பொண்ணும்மா நீ, இது கூடத் தெரியாமல் ட்றெயினில் ஏறினாயா?" என்று தனது வெற்றிலைக் காவி பிடித்த வாயால் ஒரு சிரிப்புச் சிரித்தான்.
அவசரமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு மெதுவாக நகரத் தொடங்கிய ட்றெயின்ல் இருந்து குதித்து இறங்கினாள். ஸ்டேஷன் வாசலில் டாக்சி பிடித்து சங்கரின் வீட்டை நோக்கிப் பயணித்தாள்.

சங்கரின் வீட்டு வாசலை அடைந்தவளுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. அவன் தங்கை கலா வீட்டு முற்றத்தில் சந்தோஷமாகத் தனது தோழிகளுடன் கரம் விளையாடிக் கொண்டிருந்தாள். நித்தியாவின் மனது யுத்தம் செய்தது.......அண்ணன் இறந்து ஒரு நாளில் தங்கை இப்படிச் சந்தோஷமாக இருக்கிறாளே என்று. வாசலில் நின்றவளைக் கண்ட சங்கரின் தங்கை கலா "வாங்க அண்ணி வாங்க, நேத்தைக்கே வருவீங்க என்று நினைச்சன்" என்றாள்!
அவளின் வார்த்தையை நித்தியா புரிந்து கொண்டாள். நேத்துத் தான் சங்கரின் பிணத்தை அடக்கம் செய்தோம்இன்றைக்கு வந்து நிக்கிறியளே என்று கேட்பது போல இருந்தது.
"ஆமா, சங்கரை.........." அதற்கு மேல் நித்தியாவின் நா பேச மறுத்தது. "அண்ணனை ஹாஸ்பிட்டல்ல வைச்சிருக்கோம், வாங்க போய்ப் பாக்கலாம் என்று நித்தியாவின் கைகளைப் பிடித்து இழுத்தவண்ணம் தன் காரில் ஏறினாள்.
"இங்க தான் அண்ணன் இருக்கு. நீங்க பாருங்க, நான் டாக்டர் கிட்ட பேசிட்டு வந்திர்றன்" என்று டாக்டரின் ரூம் நோக்கி நடந்தாள் கலா.
கதவைத் திறந்து சங்கரைத் தனியாகப் பார்க்கவே நித்தியாவுக்குப் பயமாக இருந்தது. தைரியத்தை வரவழைத்துக் கதவைத் திறந்தாள். அங்கே சங்கர் தலையிலே பெரிய கட்டுடன் படுத்திருந்தான்.

அருகிலே சென்ற நித்தியா ஓவென்று அழுது விட்டாள்.
அவன் நினைவெல்லாம் நித்தியா ஆகியவளின் அழுகுரல் கேட்டு அவன் கண்கள் மெல்ல விரிந்து, நித்தியாவின் முகம் பார்த்தது. உதடு "எப்பிடி இருக்கிறாய் நித்தியா?" என்று சுகம் விசாரித்தது.
பிணம் பேசுதா இல்லை உயிர் பேசுதா.... நித்தியா பயத்தாற் குழம்பினாள். "பயப்படாதே நித்தியா, நான் சாகலை. உயிரோடு தான் இருக்கேன்" நித்தியாவுக்கு எதை நம்புவது, என்ன செய்வது என்று தெரியாமல் தள்ளாடினாள். சங்கரின் அருகில் வந்த டாக்டர் "சங்கர் இப்ப எப்பிடி இருக்கு?" என்ற வினாவினார். தங்கை கலாவோ "அண்ணை, அண்ணி வந்தாச்சு" என்றாள்.

இதைக் கேட்ட நித்தியாவுக்கு ஒரு நாடகம் பார்ப்பது போல் இருந்தது. இருந்தாலும் சங்கர் என்று அவன் கைகளை வருடினாள்; நாடித்துடிப்பு இருக்கிறதா என்று பரிசோதித்தாள் அவள் சங்கரின் நாடியோ நித்தியா, நித்தியா என்று துடித்தது.
"அண்ணி பயப்பிடாதீங்கோ, எப்பிடியும் உங்களை அடையிறதுக்காக அண்ணன் நடத்திய நாடகந்தான் இது"
"நாடகமா?"
ஆமா அண்ணி, நடந்த ட்றெயின் விபத்தில் அண்ணனுக்கு சரியான காயம். வவுனியா ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருந்தாங்க. பிழைக்கிறது கஸ்டம் என்று அங்க உள்ள டாக்டர் சொன்னதால உடனே கொழும்புக்குக் கொண்டு வந்தம். கொழும்பில உள்ள டாக்டர் 30% பிழைக்கச் சான்ஸ் இருக்குதெண்டு சொன்னவர். அதனால அண்ணன், தான் எப்பிடியும் செத்திடுவேன் என்று சொல்லி பொய்யா உங்களுக்கும் சேதி அனுப்பி, ரேடியோவுக்கும் சேதி அனுப்பிடிச்சு."

இதைக்கேட்ட நித்தியா சந்தோஷத்தில் சங்கரை இறுக அணைத்தபடி "என்னை மன்னிச்சிடுங்க" என்று முனகினாள்.
"ஆமா மன்னிச்சிடுங்க என்று நீ சொன்னாய் உன்னோட வயித்தில வேற ஒரு முனகல் சத்தம் கேக்குதே......."
"அது வேற ஒண்ணும் இல்லை, உங்க பையன் தான் வயித்தில முனகிறான். இன்னும் ஏழு மாதம் 14 நாள் கழிச்சு உங்ககிட்ட நேரில முனகப் போறான் பாருங்க"என்றாள் நித்தியா.

தகப்பனாகிய சந்தோஷத்தில் நித்தியாவை அணைத்தபடி, சுகதேகியாக, - புதுவாழ்க்கை நடத்தப் புறப்பட்டான் சங்கர்.

(முற்றும்)

6137 காட்சிகளை நடத்திய நாட்டிய நாடகம் போன்றதான கோரஸ் லைன் (Chorus Line) என்ற Broadway Show 15 வருடங்கள் நடந்த பின்னர் 1990ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நிறுத்தப்பட்டது.

# அட்டைப்பட விளக்கம்......

பூமியின் அடியுள் புதையுண்டு கிடந்து அழுத்தம் கூடியதால்த்தான் நிலக்கரி வைரமாக மாறியது. சுடச்சுட... தங்கம் மிளிர்கிறது. பிரச்சினைகளும், சவால்களும் கூடும் போது தான் தைரியமும் சமயோசித புத்தியும் வளர்கின்றன.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் அமைப்புகளாக ஐரோப்பாவிலேயே முன்னணி வகிக்கும் அமைப்புகளுள் ஒன்றாக இதுவரையிலும் இருந்து வந்திருக்கின்ற பிராங்பேட் தமிழ்மன்றத்துக்குள்ளும் கூட சில சவால்களும் பிரச்சினைகளும் ஏற்படத்தான் செய்தன. பிரிவினை ஏற்பட்டுவிடுமோ என்று கூடப் பல நெஞ்சங்கள் துடிக்கும் நிலை இருக்கத்தான் செய்தது. ஆனால், அறிவில் வளர்ந்து, உணர்வில் ஊறி, உறவாய் நிலைத்துவிட்ட ஒன்றை இலகுவில் இழக்கவோ அல்லது அதனை அழிக்கவோ எவரும், எப்போதும் நினைக்க மாட்டார்கள் என்பதையும் நமக்கு விரும்பிய தேவையான ஒன்றை நிலை நிறுத்திக் கொள்ளுவதற்காக விட்டுக் கொடுக்கவும் ஒன்றுபட்டுக் காரியமாற்றவும் தயாராக இருக்கிறோம் என்பதையும் எடுத்துக் காட்டிவிட்டனர் அனைத்து தமிழ்மன்ற அன்பர்களுமே.

பிரச்சினைகள் நம்மைப் புடம் போடவே என்று எடுத்துக்காட்டி, அனைவரும் ஒன்றிணைந்து "இது எங்கள் தமிழ்மன்றம்;என்றும் அது பிரியவோ அன்றிச் சரியவோ விடமாட்டோம்" என ஒன்றிணைந்து செயற்பட்டதை, செயற்படப் போவதை, செயற்பட வேண்டிய முக்கியத்துவத்தை அழகான அட்டைப்பட ஓவியமாகத் தந்துள்ள எங்கள் ஓவியர் சேகருக்கு தமிழ்நாதத்தின் பாராட்டுகள் பற்பல. பிராங்பேட் தமிழ்மன்றம் மேலும் மேலும் ஐரோப்பிய மேடையில் முன்னணியில் தொடர்ந்தும் திகழும் என்ற நம்பிக்கை நிலைத்து வளரட்டும்.

<<<<<<<<<<<<<<<<<<<<<<<<>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

# தச்சருக்கு மீசை!

1979ம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தின் பிரதமராக இருந்து, 1990 நவம்பரில்த் தன் பதவியை விட்டு விலகிக் கொண்டவரான மார்கரெட் தச்சர் இப்போது நியமனசபையான பிரபுக்கள் சபையில் அங்கத்துவம் பெற்றதன் மூலம் சீமாட்டி என்று அழைக்கப்பட்டாலும் தனது 11 ஆண்டுகாலப் பிரதமர் பதவியின் போது பல எதிர்ப்புகளையும் வெறுப்புகளையும் தேடிக்கொண்டாரோ என்னவோ ............... இங்கிலாந்தின் பாராளுமன்ற உணவுச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அவரின் உருவப்படத்துக்கு யாரோ ஹிட்லர் மீசை வைத்துவிட்டார்கள்.

# பத்தும் பலதும்

**சிறீ -வீஸ்பாடன்.**

## வாழ்வது உனக்காக!

"என் இதயம் துடிப்பது உனக்காக"
என்று பொய் சொல்ல மாட்டேன்!
அது நான் வாழ்வதற்காகவே!
ஆனால் நான் வாழ்வதோ உனக்காக.

## சிறகுகள் விறகுகள்!

தமிழீழப் பொங்கல் அடுப்பின் விறகுகள்
ஸ்ரீலங்கா விமானத்தின் உடைந்த சிறகுகள்!

## என் தமிழ் என் மக்கள்!

பாலையும் தேனையும் பாகையும் பருப்பையும்
பிள்ளையாருக்குக் கொடுத்து - அவரிடம்
சங்கத்தமிழ் மூன்றையும் கேட்கும்
ஔவையார்கள் இல்லையே இப்போது!
இங்கு ஜேர்மன் ஒன்றையே கேட்கும்
பிள்ளைகளோ ஏராளம்! ஏராளம்!

## தெரியும்! தெரியாது!

குஷ்பு தெரியும்! ரஜனி தெரியும்!
மக்டொனால்ட்ஸ் தெரியும்! சைனீஸ் தெரியும்!
சுவிஸ் தெரியும்! பரிஸ் தெரியும்!
ஆனால் தமிழீழம் என்றாலோ
இங்குள்ள நம்மவர் சிலருக்கு
எங்கென்றே தெரியாதாம்!

# ஆங்கிலேயர் ஆட்சியால் அநாதைகள் ஆக்கப்பட்ட இந்திய வம்சாவழினர்

அத்தியாயம் – 5. சி.நரேந்திரசிங்கம் – பிராங்பேர்ட்.

## அரசியலும் பிரஜாஉரிமையும் - பகுதி 2

**1948**ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமைக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றும் வாக்கெடுப்பில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜீ.ஜீ பொன்னம்பலம் இந்திய வம்சாவழியினருக்கு வாக்களித்தார். அதே நேரத்தில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் இருந்த திரு. S. J. V. செல்வநாயகம் இந்திய வம்சாவழியினருக்கு சார்பாக வாக்களித்தார், மேலும் திரு. S. J. V. செல்வநாயகம் "இந்திய வம்சாவழியினரின் கழுத்தில் கத்தி விழுந்துவிட்டது. அடுத்து பாரம் பரியமாக வாழுகின்ற தமிழர்களது கழுத்தில் கத்திவிழும்" என்று கூறினார். திரு. S. J. V. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரஸிலிருந்து விலகி தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தார். அன்று வாக்குரிமைச்சட்டத்தை எதிர்க்க இலங்கைத் தமிழர்களை விடக் கூடுதலான சனத்தொகை உடையவர்களாக இருந்த இந்திய வம்சாவழியினர் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம், எதிர்புக்களைத் தெரிவிக்க தவறிவிட்டார்கள். பெரிய எதிர்ப்புகளை நடத்தி இருந்தால், பாரம்பரிய இலங்கைத் தமிழர்களில் ஒரு பகுதியினர் நிச்சயமாக ஆதரவு கொடுத்திருப்பார்கள்.

1947ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழரும், இந்திய வம்சாவழியினருமாக 20 பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருந்தார்கள். 1952ஆம் ஆண்டு தேர்தலில் 13 தமிழ் அங்கத்தவர்கள் மட்டுமே இருந்தனர். 72 % வாக்காளர்களான சிங்கள மக்களுக்கு 81% ஆசனங்கள் இருந்தன. இக்காரணங்களால் சிங்கள மக்கள் தமிழ் மக்களின் உரிமைக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் எத்தகைய தீர்மானங்களையும் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. 1953 சித்திரையில் டட்லி செனநாயக்கா-C. C. தேசாய், 1953 ஆனியில் நேரு, டட்லி சேனநாயக்கா இங்லாந்தில் பேச்சுக்களை நடாத்தினார்கள். இதனால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. மீண்டும் புதுடில்லியில் 1954ஆம் ஆண்டு தைமாதம் நேருவும், சேர் ஜோன் கொத்தலாவலையும், 1954ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பதத்தின் படி (Indo-Ceylon Agreement) நேரு-கொத்தலாவலை உடன் படிக்கையை ஏற்படுத்தினார்கள். அவையாவன:

1. இரண்டு நாடுகளும் சட்டவிரோத குடியேற்றத்தைக் கவனித்து நடவடிக்கை எடுத்தல்.
2. இரு சாராரும் இந்திய - பாகிஸ்தானிய ஒப்பந்தத்தின் படி மக்களை இரண்டு வருடத்திற்குள் பதிவு செய்ய ஊக்கமளித்தல்.
3. இலங்கைப் பிரஜைகளாக பதிவு செய்யப்படாதவர்களை இந்திய தூதுவராலயத்தில் இந்தியப் பிரஜையாக பதிவு செய்யஅனுமதித்தல்.
4. இலங்கைப் பிரஜையாக நியமிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் வாக்காளர் பட்டியலில் சேர்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் இத்தகைய ஒப்பந்தம் இந்திய வம்சாவழியினருக்கு நிரந்தரதீர்வாக அமையவில்லை. 1951ஆம் ஆண்டுக்கும் 1962ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 132312 நபர்கள் மட்டுமே இலங்கைப் பிரஜா உரிமையைப் பெற்றனர். இக்கால கட்டத்தில் 35411 பேர் இந்தியா-பாகிஸ்தான் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரஜாஉரிமையைப் பெற்றனர். 1964ஆம் ஆண்டு 975000

பேர் நாடற்றவர்களாகக் கருதப்பட்ட னர்.

1964ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆம் திகதி சிறீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. ஒப்பந்தமா னது:

1. 300. 000 பேருக்கும் பேருக்கும் அவர்கள் சந்ததியினருக்கும் இலங் கைப் பிரஜா உரிமை கொடுக்கப் பட வேண்டும்.

2. 525, 000பேரையும் அவர்கள் சந்த தியினரையும் இந்திடப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளுதல்.

3. மிகுதியாக இருக்கும் ஏறக்குறைய 150. 000 பேரைப் பற்றி, பின்னர் முடிவு எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட் டது.

4. இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப் படுவோருக்கு 15 வருடகால அவகாசம் கொடுக்கப்படவேண்டும்.

5. திருப்பி அனுப்பட்டுவோர் அதுவ ரையும் இலங்கைப் பிரஜையைப் போல் கணிக்கப்படவேண்டும் என்றும், அவர் கள் இந்தியா செல்லும் வரை வேலைவாய்ப்பு கொடுக்கப்படவேண் டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

6. இவர்கள் தங்களது உடைமைக ளையும், எதிர்கால சேமிப்புநிதி (Provident Fund)ஐயும், ரூபா 400ம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்டுவர். மேலும் சிறீமா-சஸ்திரி ஒப்பந்தத்தின் போது சம்பந்தப்பட்டவர்கள் சார்பிலோ, அவர்களின் அமைப்புக்களுடனோ, அல்லது நியமன அங்கத்தவர் திரு. S. தொண்டமான் அவர்களையோ, தமிழக அரசாங்கத்தையோ கலந்தா லோசிக்கவில்லை. இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்களின் பங்களிப்பு இல் லாது, அவர்களின் கருத்துகளுக்கு இடம் கொடாது எடுக்கப்பட்ட தீர்மா னத்தை இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் கண்டித்தது. இலங்கைத் தமிழ்த் தலைவர்களும் கண்டன அறிக்கையை விட்டனர். இந்திய-இலங்கை ஒப்பந் தத்தின் படி பிரஜா உரைமை வழங்கப் படாமல் 7 நபர் இந்தியா திரும்பிச் சென்றால் 4 நபருக்கு மட்டுமே பிரஜா உரிமை வழங்கப்பட்டது. இப்படியான நடைமுறைப்படுத்தலால் இலங்கையில் பிரஜாவுரிமை பெற இருந்தவர்கள் தமது பிரஜா உரிமையை உரிய நேரத் தில் பெற முடியாமல் போய்விட்டது.

1974ஆம் ஆண்டு இந்திரா காந்தி-சிறி மாவோ பண்டாரநாயக்காவின் ஒப்பந் தப்படி, சாஸ்திரி-சிறிமாவோ ஒப்பந்தத் தில் மிஞ்சிய 150. 000 பேரை இருநா டுகளும் சரிபாதியாக ஏற்றுக் கொள்வ தாகத் தீர்மானிக்கப் பட்டது. 1977ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்தனாவின் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந் தது. தொழிலாளர் காங்கிரஸ் வேட் பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு . எஸ். தொண்டமானும் திரு. ஜெயவர்தனாவின் மந்திரி சபையில் அங்கம் வகித்தார். ஜெயவர்த்தனாவோ 7:4 என்ற வீதாசாரத்தை கடைப்பிடித் தார். இதனைக் கண்ட தொழிலாளர் காங்கிரஸ் இடை இடையே சில வேலை நிறுத்தங்களை நடாத்தினார் கள். இதனால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. கடைசியில் 1986-ஆம் ஆண்டு தை மாதம் 14ஆம் திகதி தைப் பொங்கலில் இருந்து 1986ஆம் ஆண்டு 15ஆம் திகதி சித்திரை வருடப் பிறப்பு வரை வன்செயல் அற்ற அமை தியான சத்தியாக்கிரகம் ஒன்றைச் செய்வதாக தீர்மானித்தார்கள். அதற்கு முதல் அரசாங்கம் கணிசமான அளவு மக்களுக்கு பிரஜாவுரிமை கொடுக்க உடன்பட்டதை அடுத்து, சத்தியாக்கி ரகத் தீர்மானம் கைவிடப்பட்டது.

சிறிமா-சாஸ்திரி, சிறிமா-இந்திரா காந்தி உடன்பாடுகளின்படி 1981ஆம் ஆண்டு ஐப்பசி 31ஆம் திகதியோடு மொத்தம் 600. 000 தமிழர்கள் இந்தியா விற்கு அனுப்பப்படவேண்டும். ஆனால் 1986ஆம் ஆண்டுவரை 421. 000 பேர் அனுப்பப்பட்டனர். அதே வேளை பிர ஜாவுரிமை வழங்கப்பட வேண்டிய 40-0. 000 தமிழர்களில் 197. 000 பேருக்கு மட்டுமே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருந்தது. எஞ்சியுள்ள தமிழர்களில் திரு. ஜெயவர்த்தனா 94.-000 பேர்களுக்குப் பிரஜாவுரிமை வழங் குவதற்கு சம்மதித்தார். மிகுதியானோர் இந்தியா சென்றேயாகவேண்டும். இருந்தும் 1986ஆம் ஆண்டு முடிய 32.-000 நபர்களுக்கே பிரஜாவுரிமை வழங்க சிபாரிசு செய்யப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இலங்கைத்

தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் ஒரு அஹிம்சைப் போராட்டத்தை நடாத்தப் போவதாக அறிவித்ததும் அரசு ஊழியர் கள் ஒவ்வொரு தோட்டத்திற்கும் சென்று மீண்டும் துரிதமாக பிரஜாவு ரிமை பதிவு வேலையில் ஈடுபட்டார் கள்.

1972ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி நடைமுறைக்கு வந்த குடியரசு யாப்பில் பிரஜாவுரிமை சம்பந்தமான விடயங்களுக்கு இடம் கொடுக்கப்பட வில்லை. மேலும் இந்த யாப்பில் சோல்பரி யாப்பில் இருந்த 29ஆம் பிரிவின்படி சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்டிருந்த உத்தரவாதங்கள் இடம் பெறவில்லை. இந்த யாப்பு சம்பந்தமாக அரசியல் நிர்ணய சபைக்கு (Constitution Assembly) தமிழரசுக் கட்சியினரால் கொடுக்கப்பட்ட மனுவில் பிரஜாவுரிமை சம்மந்தமானவையும் உள்ளடக்கப்பட் டிருந்தன. 1972ஆம் ஆண்டு மாசிமா தம் 5ஆம் திகதி அகில இலங்கைத் தமிழர்களால் நடாத்தப்பட்ட கூட்டத் தில் பிரஜாவுரிமை சேர்க்கப்படாமல் தவிர்க்கப்பட்டதும், பிரஜாவுரிமை பல பிரிவுகளாக இருப்பதும் மக்கள் வித் தியாசமாகக் கணிக்கப்படுவதும் தவிர்க் கப்படவேண்டும் என முடிவெடுக்கப்பட் டது. இம்முடிவு அரசியல் நிர்ணய சபையால் நிராகரிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமை சாசனத்தின் 15ஆவது சாரத்தின்படி ஒவ்வொரு மனிதனும் ஒரு நாட்டைச் சேர்ந்தவ னாக இருத்தல் வேண்டும் (Article 15 of the universal Declaration on Human Rights; Every one has the right to a nationality, No one shall be arbitrarily deprived of his nationality nor denied the right to change his nationality) சர்வதேச விதிமுறைகள் எப்படி இருப்பினும் இலங்கை அரசாங்கம் பௌத்த பேரினவாதம் கொண்டு சிறு பான்மை மக்களைப் பல வழிகளிலும் துன்புறுத்தி வருகிறது. 1927ஆம் ஆண்டு இலங்கை வந்த மகாத்மா காந்தி அவர்கள் மலையகத் தமிழரை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும், இவர்கள் இருசாராரும் பாலில் சர்க்கரை கலந்தாற்போல் இணைந்து வாழ்வார்கள் என்று கூறி னார். புத்தரையும், காந்தியையும் மதிக் கும் நாட்டில் காந்தியின் வாக்கிற்கு மதிப்பின்றிப் போயிற்று. 1948ஆம் ஆண்டு இந்திய வம்சாவழியினருடைய வாக்குரிமையைப் பறித்து நாடற்றவர் களாக்கி, இந்தியா அவர்களைப் பொறுப்பேற்கவேண்டும் என்றபோது அன்றைய இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட் டார்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திர மடைந்ததின் பின் இந்திய வம்சாவழி யினர் எதிர் நோக்கிய கஷ்டங்கள் எண்ணிலடங்கா. அதிலும் ஒரு பௌத்த நாடு இப்படியாகச் செயல்பட் டதை எண்ணும் போது மிகவும் வேத னையளிக்கிறது. சிங்கள வன்னிப் பிர தேசங்களில் எவ்வளவோ காடுகள் இருக்கின்றன. அரசாங்கம் இப்பிரதே சங்களில் சிங்களவர்களைக் குடி அமர்த்த முன்வரவில்லை. வன்னியில் நீர்பாசன வசதி செய்யப்பட்ட நிலங்க ளில் சிங்களவர் மட்டுமே குடியேற்றப் படுகின்றனர். எத்தகைய சட்டங்கள் தீர்மானங்கள் வந்தாலும், இந்தியாவில் இருந்து வந்த முஸ்லீம் மக்கள் பாதிக் கப்படவில்லை. அவர்கள் இலங்கைப் பிரஜையாகி வாக்குரிமை பெற்று, சகல சௌகரியங்களுடன், அரசியலிலும் முக் கிய பங்கை வகித்து வருகிறார்கள். முஸ்லீம்களின் சனத்தொகையும், பாராளுமன்ற அங்கத்துவமும் கூடிக் கொண்டே போகிறது. கிழக்கு மாகா ணத்தில் எப்படித் திட்டமிட்ட குடியேற் றங்களை நடாத்தித் தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கி வந்தார்களோ, அதேபோல் மலையகத்திலிருந்தும் மலையக மக்களை நாடுகடத்தினார் கள். மேலும் மலையகத்தில் தமிழர் செறிவாக வாழ்கின்ற பகுதிகளில் சில தோட்டங்களை அழித்து சிங்கள குடி யேற்றங்களை நடாத்தி வருகிறார்கள். காரணம் மலையகம் முழுவதும் சிங்கள பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற நோக்கு டனே செயல்ப்பட்டு வருகிறார்கள்.

## 1947ல் இருந்து 1977 வரையிலுமான பாராளுமன்ற பிரதிநிதித்துவம்

| | மொத்த ஆசனங்கள் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இ. வம்சாவழி தமிழர் | முஸ்லீம்கள் |
|---|---|---|---|---|---|
| 1946ல் சனத்தொகை | | 69. 48% | 11. 08% | 11. 78% | 7. 08% |
| இருக்கவேண்டிய அங்கத்தவர்கள் | 95 | 66 | 11 | 12 | 6 |
| பாராளுமன்ற அங்கத்தவர்கள்<br>1947<br>1952<br>1956 | 95<br>95<br>95 | 68<br>75<br>75 | 13<br>13<br>12 | 7<br>-<br>- | 6<br>6<br>7 |
| 1958ல் சனத்தொகை | | 69. 38% | 10. 98% | 12. 08% | 6. 38% |
| இருக்கவேண்டிய அங்கத்தவர்கள் | 151 | 106 | 17 | 18 | 10 |
| பாராளுமன்ற அங்கத்தவர்கள்<br>பங்குனி 1960<br>ஆடி 1960<br>1965<br>1970 | <br>151<br>151<br>151<br>151 | <br>123<br>122<br>121<br>123 | <br>18<br>18<br>17<br>19 | <br>-<br>-<br>-<br>- | <br>9<br>11<br>11<br>8 |
| 1971ல் சனத்தொகை | | 71. 98% | 11. 18% | 9. 48% | 7. 08 |
| இருக்கவேண்டிய அங்கத்தவர்கள் | 168 | 121 | 19 | 16 | 12 |
| பாராளுமன்ற அங்கத்தவர்கள் 1977 | 168 | 136 | 19 | 1 | 12 |

(தொடரும்)

# பத்து வருட இடைவெளியில்..........

**1982**க்கும் 1992க்கும் இடையிலான பத்து வருடங்களில் குடும்பநல விடயங்கள் சிலவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமை கொள்கிறது தமிழ்நாதம்.

| | 1982 | 1992 |
|---|---|---|
| பிள்ளைவளர்ப்புக்கான பணம்<br>(Erziehungs Geld) | | 18 மாத காலத்திற்கு 600 D.M.<br>(1993 முதல் இரண்டு வருடங்களுக்கு) |
| பிள்ளை வளர்ப்புக்கான விடுமுறை<br>(Erziehungs Urlaub) | | மூன்று வருடங்கள்<br>தாய் அல்லது தந்தைக்கு 3 வருடகால<br>விடுமுறையின் பின் வேலை உத்தரவாதம் |
| குழந்தைகளுக்கான வரிவிலக்கு<br>(Kinder Frei Betrag) | | ஒரு குழந்தைக்கு 4, 104 D.M. விதம். |
| குழந்தைக்கான பணத்திற்கு<br>மேலதிகம். (Kinder Geld zuschlag) | | குறைந்த வருமானகாரருக்கு<br>65 D.M. மாதம் ஒன்றுக்கு. |
| குழந்தையின் சுகவீனம் காரணமாக<br>விசேட விடுமுறை | ஐந்து<br>நாட்கள் | தாய்க்கும் தந்தைக்கும் ஒவ்வொருவருக்கும்<br>பத்து நாட்கள்.<br>தனியாக இருக்கும் தாய்/தந்தைக்கு<br>இருபது நாட்கள். |

எல்லோரும் என் வரவிற்காய்க்
கால்கடுக்கக் காத்துக் கொண்டிருப்பார்கள்
அவர்கள் எல்லோரும் வந்தபின்பே
நான் வருவேன்


என்னில் இடம்பிடிக்க
இடித்து முந்திக்கொள்வார்கள்
அவர்கள் இடம் வந்ததும்
இறங்கிப் போய்விடுவார்கள்

காதலர் கண்களிற்கு நான்
நடமாடும் நந்தவனம்
நான் தரித்துச் செல்லும் இடமெல்லாம்
எத்தனையோ காதல்கள்
கருத்தரிக்கக் கண்டிருக்கிறேன்

கல்லூரி விடுமுறை நாள் என்றால்
நான் கலகலப்பை இழந்துவிடுகிறேன்
அந்த வெள்ளைப்புறாக்களின் வேடிக்கைகள்
எனக்கு மிகவும் பிடிக்கும்

நான் இரைச்சல் போடுவதாய்
மனிதர்கள் என்மேல்
எரிச்சல்ப் படுகிறார்கள்
இவர்கள் போடும் இரைச்சல்
அப்பப்பா! காதுகள் இல்லாததனால்த்
தப்பித்துக் கொண்டேன்

என்னை இனங்கண்டுகொள்ள இவர்கள்
இலக்கங்களை என் முகத்தில்
எழுதி வைத்துள்ளார்கள்
எழுத்தால் என் நெற்றியில்
நாமம் இட்டுள்ளனர்
ஊர் ஊராய் ஓடும் என் பெயர்தான்
பேரூந்து
என்னை எவரேனும்
தமிழில் அழைக்க மாட்டார்களா ?
என்றுநான் ஏங்குவது உண்டு
அது தான் எனது
எதிர்காலக் கனவு.



ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்
Fவோல்க்கிளிங்கன்.

இம்மலரானது தமிழ் மன்றக் கொம்பியூட்டர்ப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு 27. 02. 1993 அன்று பிராங்போர்ட் தமிழ் மன்றத்தினால் வெளியிடப்பட்டது.

Printed by TAMIL MANTRAM COMPUTER PRINTERS and published by Tamil Mantram e. V. Frankfurt on 27. 02. 1993.



# சேகர் ஆட்ஸ்

SEGAR ARTS Commercial Artist

FRANKFURT



* சஞ்சிகைகளுக்கான அட்டைப்படங்கள்
* திருமண வாழ்த்து மடல்கள்
* விளம்பர போர்ட்டுகள்
* கோயில் திரைச் சீலைகள்
* உருவப் படங்கள்

மற்றும் சகலவித ஓவிய வேலைகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள் :

தொலைபேசி: 069/ 704439 or 4960969



பிராங்பேர்ட் நகரில்!





வீடியோ படப்பிடிப்பாளர்கள்

# கலைஞன் வீடியோ மூவீஸ்

மனித வாழ்க்கையிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்நாட்களான பிறந்தநாள் விழாக்கள், பூப்புனிதநீராட்டுவிழாக்கள், திருமணவைபவங்கள், இவையாவும் காலத்தால் அழிந்தாலும், கலைஞன் வீடியோ மூவிசாரினால் அழியவிடாது தரமான முறையில் தங்கள் வைபவங்களுக்கு ஏற்ற பாடல்களுடனும், அழகிய ஓவியங்களுடனும், அழகிய தமிழ் எழுத்துக்களுடனும், அதிநவீன தொழில்நுட்பக் கருவிகளுடனும் ஓர் காவியத்தை வீடியோவில் ஒளிப்பதிவு செய்திட தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்

"வாழ்க்கை என்பது போர்க்களமல்ல அழகியதோர் கலைக்கூடம்" சிவா-069/ 45 47 85 சேகர்-ஆட்ஸ்-069/ 70 44 39

உங்கள் பயணச்சீட்டுகளை
குறைந்த செலவில்
பெற்றுக்கொள்ள

# ALTSTÄDTER REISEBÜRO

LEADING AGENTS FOR WORLDWIDE TRAVEL

**SPECIAL PRICES TO SRI LANKA!**
**SPECIAL PRICES TO LONDON**
**FOR**
**SRI LANKANS!**

***Super Prices For Super Airlines With***
***"SUPER SERVICE"***

*Agents for: Air Lanka, Air India, American Airlines, British Airways, Delta Airlines, Singapore Airlines, Royal Jordanian, TWA, United Airlines, Qantas......*
*and many more!!!*

***FOR YOUR FIRST CLASS TRAVEL SERVICE***
***CONTACT US ON***

## ALTSTÄDTER REISEBÜRO GMBH

*Taunusstr. 40-42*
*6000 Frankfurt 1*
*Tel: 069/239071*
*Fax: 069/232758*

*Bleibtreustr. 51*
*1000 Berlin 12*
*Tel: 030/3124043*
*Fax: 030/317709*

*Gabelsbergstr. 60*
*8000 München 2*
*Tel: 089/5232024*
*Tel: 089/596776*

# திலீப்றேடேர்ஸ்

# THELIB TRADERS

**பசுமையான காய்கறிகளா? அல்லது
கடலுணவுப் பொருட்களா?
வீடியோக் கசெற்றுகளா?
ஓடியோ அல்லது C. D. களா? எந்த மொழியில்?
தமிழா? மலையாளமா? இந்தியா?
பலசரக்குப் பொருட்களா? அல்லது
மதவைபவங்களுக்குத் தேவையான
சகல பொருட்களுமா?
ஆண்கள், பெண்கள், குழந்தைகள்
அனைவருக்கும் தேவையான
நவீன ஆடைகளா? எங்கிருந்து?
இந்தியாவா? சிங்கப்பூரா?
தாய்லாந்தா? இந்தோனேஷியாவா?
22 கரட் தங்கநகைகளா?
சிங்கப்பூர் தங்கநகைகளா?
பட்டு வேட்டிகள், புடவைகள், குர்தாக்களா?**

**உங்கள் தேவை எதுவானாலும் அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள**

பிராங்போர்ட் புகையிரத நிலையத்திற்கு
அருகாமையில் அமைந்துள்ள

## "THELIB TRADERS"

TAUNUS STR. 17A, 6000 FRANKFURT 1.
TEL: 069/250361-2 - FAX: 069/234045